# தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்

# 2013 ஆண்டறிக்கை

அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

# உள்ளடக்கம்

NBRO பற்றி... 3
தலைவியின் செய்தி 4
நிறைவேற்று அறிக்கை 7
எமது தொலைநோக்கு 15
எமது பணிக்கூற்று 15
கூட்டு இலக்குகள் 15
NBRO வின் முகாமைத்துவம் 16
முகாமைத்துவ கட்டமைப்பு 17
முக்கிய செயற்பாடுகள் 2013 18
பிரதான ஆலோசனை சேவைகள் 244
ஏனைய வருமானம் ஈட்டும் செயற்பாடுகள் 300
வெளிநாட்டு இணைவாக்கத்திலான செயற்த்திட்டங்கள் 311
நிதி சார்ந்த முக்கிய விடயங்கள் 33
நிதி நிலைமைக் கூற்று 35
நிதிச் செயற்பாட்டுக் கூற்று 36
காசுப்பாய்ச்சல் கூற்று 37
கணக்குகள் தொடர்பான குறிப்புக்கள் 38
மனித வளம்/இயலுமை விருத்தி 40
பங்குபற்றிய தேசிய நிகழ்வுகள் 41

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 2013 43
கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கான பதில்கள 2013 56

## NBRO பற்றி…

NBRO பல்வேறு துறைகளை சேர்ந்த நிபுணர்கள் குழுவை கொண்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை பிரதான நோக்காக கொண்ட நாட்டின் நிலையான அபிவிருத்திக்கு உதவும் நிறுவனமாகும். மலைகள், பலமற்ற நிலம், மாசடைந்த வளி, மாசடைந்த நீர், தரமற்ற நிர்மாணம் மற்றும் தரமற்ற கட்டிட மூலப்பொருள் பாவனை என்பன காரணமாக நாட்டின் வாழ்வு சூழல் பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொள்கின்றது. NBRO இந்த பிரச்சனைகளுக்கு பொருத்தமான தீர்வுகளை வழங்கி மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் நோக்கில் உருவாக்கப்பட்டது.

மண்சரிவு ஆபத்தினை இனம்காணல், வலயமாக்கல், தேசப்படமாக்கல், நலிவுறும்தாக்கவிளைவு மதிப்பீடு, விழிப்புணர்வு, தணிப்பு, மண்சரிவு இடர் மதிப்பீட்டு அறிக்கை (LRAR) மற்றும் மண்சரிவு முன்னெச்சரிக்கை போன்ற சேவைகளை NBRO முன்னெடுத்து வருகின்றது. நாட்டின் பாரிய உட்கட்டமைப்பு விருத்தி செயற்த்திட்டங்களின் போதான மண் தொடர்பான புவித்தொழில்நுட்ப பொறியியல் ஆய்வுகள் NBRO இன் ஆய்வுகூடத்திலேயே மேற்கொள்ளப்படுகின்றன. இந்த விடயம் தொடர்பாக NBRO அதன் அனுபவத்தை பயன்படுத்தி நாடளாவியரீதியில் புவித்தொழில்நுட்ப பொறியியல் ஆய்வுகளை ஒழுங்கமைக்கும் நடவடிக்கைகளிலீடுபட்டுள்ளது. மேலும் கட்டிட மூலப்பொருட்களை பரிசோதித்து சான்றினை வழங்குவது நிறுவனத்தின் சிறந்த உபகரணங்களை கொண்ட ஆய்வுகூடம் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவானது நிர்மாண நடவடிக்கைகள் தொடர்பான செயற்த்திட்டங்களுக்கு ஆலோசனை சேவைகள் வழங்குவதுடன் பாதிப்புக்குள்ளாகும் கட்டிடங்கள் தொடர்பான ஆய்வு சேவைகளையும் மேற்கொள்ளுகின்றது. அத்துடன் மனித குடியேற்ற திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி தொடர்பில் செலவு குறைந்த வீடமைப்பு பற்றிய ஆலோசனைகள் மற்றும் ஏனைய மரபுரீதியான சேவைகளையும் NBRO வழங்குகின்றது.

தற்போது NBRO அதன் செயற்பாட்டு எல்லையினை விஸ்தரித்து அனர்த்தங்களுக்கு தாக்குப்பிடிக்கக்கூடிய மாதிரி வீடுகள் வடிவமைக்கப்பட்டு சில வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அனர்த்த இடர் மதிப்பீடு மற்றும் தண்ணீரின் தர மதிப்பீடு, கழிவு நீர், மண், வண்டற்படிவுகள், காற்று மற்றும் வெளியீடுகள் போன்றன தொடர்பான கற்கைகள் NBRO இல் மேற்கொள்ளப்படுகின்றன.

NBRO அதன் நடப்பு செலவுகளை அதன் ஆலோசனை சேவைகள் மூலம் பெறும் வருமானம் மூலம் ஈடுசெய்கிறது. மேலும் சில முக்கிய மண்சரிவு தொடர்பான செயற்த்திட்டங்களுக்கு ஜப்பானிய அரசாங்கம் நிதியுதவி வழங்கியது. மத்திய மாகாணத்தில் மண்சரிவு அபாயமுள்ள பாடசாலைகளில் ஆபத்து இடர் தணிப்பு தொடர்பான நடவடிக்கைகள் உலகவங்கியின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டன. நோர்வே அரசாங்கம் மண்சரிவு இடர்க்குறைப்பு செயற்த்திட்டங்களுக்கும் நிலப்பிளவு தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள NBRO இன் இயலுமையை அதிகரிக்கும் செயற்பாடுகளுக்கும் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியளித்தது. இவற்றைவிட மேலும் சில இணை நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு நிதியுதவி வழங்குனர்கள் போன்றோரும் ஆய்வு மற்றும் செயற்த்திட்டங்களுக்கு நிதியுதவி வழங்க முன்வந்துள்ளனர்.

# தலைவியின் செய்தி



தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் உள்ளக முகாமைத்துவ குழுவின் தலைவி என்ற அடிப்படையிலும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் என்ற வகையிலும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் 2013 இற்கான ஆண்டறிக்கையையும் நிதிக்கூற்றுக்களையும் உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இதன்மூலம் உங்களால் NBROஇன் தொழில்நுட்ப ஆற்றல்கள் மற்றும் எவ்வாறு நிறுவன நிதிநிலமை பேணப்பட்டுள்ளது போன்ற விடயங்களை அறிந்து கொள்ளமுடியும்.

NBRO தற்போது நாட்டிலுள்ள ஒரு முதிர்ச்சி பெற்ற நிறுவனமாகும். அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழுள்ள நிறுவனம் என்ற அடிப்படையில் NBRO அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் முக்கிய இடத்தை பெறுகின்ற அதேவேளை தேசிய திறைசேரியால் வழங்கப்படும் நிதி மண்சரிவு தணிப்பு தொடர்பான செயற்த்திட்டங்களுக்கு முதலீடு செய்யப்பட்டது. NBRO தற்போது நாட்டிலுள்ள முன்னணி ஆய்வு நிறுவனமாகும். இதனால் ஆண்டுதோறும் அரசு ஆய்வு நடவடிக்கைகளுக்கென மானியமாக நிதியினை வழங்குகின்றது. இந்த ஆய்வுகளின் கண்டுபிடிப்புக்கள் NBRO இன் வருடாந்த ஆய்வரங்கில் வெளியிடப்படும். வழமைபோல NBRO நாட்டின் பல்வேறு துறைகளை சார்ந்த தொழில்நுட்ப வல்லுனர்களை கொண்ட சேவைவழங்குனராக தொழில்பட்டு நாட்டின் அபிவிருத்தியில் பாரிய பங்காற்றுகின்றது.

2013 இல் NBRO மண்சரிவு ஆபத்து இனம்காணல், வலயமாக்கல், தேசப்படமாக்கல், நலிவுறும் தாக்கவிளைவு மதிப்பீடு, தடுப்பு, விழிப்புணர்வு ஏற்படுத்தல் மற்றும் முன்னெச்சரிக்கைகளை விடுத்தல் போன்ற பணிகளை சிறப்பாக மேற்கொண்டுள்ளது. LRAR களை மண்சரிவு ஆபத்தான பகுதிகளில் மேற்கொள்ளும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு வழங்கும் செயற்பாடானது NBRO இன் மாவட்ட அலுவலகங்களூடாக மேற்கொள்ளப்பட்டது.

பேராதனை மண்சரிவு தணிப்பு செயற்த்திட்டம் NBROஇன் வரலாற்றில் முக்கிய திருப்புமுனையான செயற்த்திட்டமாகும். இந்த செயற்த்திட்டத்தின் கீழ் முன்மொழியப்பட்ட கொழும்பு-கண்டி வீதிக்கு குறுக்கேயான பாதுகாப்பான நடைபாதை மக்களாலும் நிறுவனங்களாலும் பெரிதும் பாராட்டப்பட்டது. பதியப்பளல்ல மண்சரிவு தணிப்பு செயற்த்திட்டமும் நிறைவு செய்யப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டது. கிரந்தியெல மண்சரிவு தணிப்பு திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்படுவதுடன் சின்ன ரத்தோட்டை தணிப்பு நடவடிக்கைகள் 2013 இல் ஆரம்பிக்கப்பட்டன.

NBRO மாத்தளையில் நிலப்பிளவு ஏற்பட்ட பகுதிகளில் நில அடுக்குகள் தொடர்பான ஆய்வினை மேற்கொண்டது.

இதன்போது ராடர் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இந்த ஆய்வினை மேற்கொள்ள NBRO நோர்வே புவித்தொழில்நுட்ப நிறுவகத்தின் உதவியை பெற்றுக்கொண்டது. மேலும் NBRO தொடர்ச்சியாக இவ்வாறான ஆபத்துக்களை குறைக்கும் ஆய்வுகள், கற்கைகளை மேற்கொள்ளும்.

பாதிக்கப்பட்ட கட்டிடங்கள் மற்றும் திருத்தியமைக்கப்பட வேண்டிய கட்டிடங்கள் போன்ற கட்டிடங்களின் நிலைமை தொடர்பான அறிக்கைகளை வழங்குதல் NBRO இன் முக்கிய ஆலோசனை சேவையாக உருவெடுத்துள்ளது. மேலும் கட்டிட மூலப்பொருட்களின் தன்மையினை பரிசோதித்தல் மற்றும் சூழலின் தன்மைக்கேற்றவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என கண்காணித்தல் என்பனவும் நிறுவன முக்கிய பணிகளாக காணப்பட்டது.

NBRO இன் செயற்பாடுகள் தற்போது மிக சிறப்பாக உச்ச நிலையில் இருப்பதால் அதனால் ஆலோசனை சேவைகள் தொடர்பான கேள்விபத்திரங்களுக்கு விண்ணப்பிக்க முடிந்தது. இதனால் நீர்த்தேக்க பாதுகாப்புடன் இணைந்த நீர் தர மற்றும் வண்டற்படிவு பற்றிய ஆய்வு மற்றும் நீர் வள முகாமைத்துவ செயற்த்திட்டம் மற்றும் தெற்கு அதிவேக பாதையின் விஸ்தரிப்பின் போதான புவித்தொழில்நுட்ப ஆய்வு மற்றும் பகுதி வடிவமைப்பு போன்ற முக்கிய செயற்த்திட்டங்கள் நிறுவனத்திற்கு கிடைத்தது.

NBRO அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளிலீடுபடும் உள்நாட்டு மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட பலமுயற்சிகளை மேற்கொண்டது. இதன்விளைவாக NBRO இனால் மேற்கொள்ளப்படும் ஆய்வு நடவடிக்கைகளை இணைந்து மேற்கொள்ள பல சர்வதேச நிறுவனங்களின் இணைப்பு கிடைத்துள்ளது.

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான விடயங்களில் முக்கியமான நிறுவனமென்ற வகையில் NBRO அனர்த்த முகாமைத்துவ எண்ணக்கருக்கள், அனர்த்தங்களுக்கு தாக்குப்பிடிக்கக் கூடிய திட்டமிடல் மற்றும் அனர்த்தங்களுக்கு தாக்குப்பிடிக்கக் நிர்மாணம் போன்றன தொடர்பில் கூடிய கவனம் செலுத்தியுள்ளது. அனர்த்தங்களுக்கு தாக்குப்பிடிக்கக் நிர்மாணம் தொடர்பில் இலங்கையிலேயே வெளியிடப்பட்ட முதல் கையேடு NBRO இனால் வெளியிடப்பட்டது. இந்த கையேட்டின் அடிப்படையில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அனர்த்தங்களுக்கு தாக்குப்பிடிக்கக்கூடிய மாதிரி வீடுகள் தேசிய பாதுகாப்பு தினம் மற்றும் தயட்ட கிருள கண்காட்சி என்பவற்றை நோக்காக கொண்டு நிர்மாணிக்கப்பட்டன.

இறுதியாக 2013 ஆம் ஆண்டில் NBRO சிறப்பாக தொழிற்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். 2010 முதல் NBRO இலாபம் ஈட்டுகின்ற அதேவேளை நிறுவன மொத்த வருமானம் 2013 ஆம் ஆண்டில் ரூபா.261.8 மில்லியனாக காணப்பட்டது. இது 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 25% அதிகரிப்பாகும். குறித்த ஆண்டில் தேறிய இலாபம் ரூபா.11.22 மில்லியனாக காணப்பட்டது.

இந்த வெற்றிகரமான செயற்பாட்டிற்கு காரணமான நிறுவன ஊழியர்களை பாராட்டி ஊக்குவிக்கும் வகையில் ஊக்குவிப்பு கொடுப்பனவு திட்டம் மற்றும் வைத்திய காப்புறுதி திட்டம் என்பன அறிமுகம் செய்யப்பட்டன.

இச்சந்தர்ப்பத்தில் அதிமேதகு ஜனாதிபதி மற்றும் தேசிய அனர்த்த முகாமைத்துவ சபையிலுள்ள (NCDM) அனைத்து கௌரவ அமைச்சர்களுக்கும், கௌரவ. மஹிந்த அமரவீர, அனர்த்த முகாமைத்துவ

அமைச்சர் மற்றும் கௌரவ. டுலீப் விஜேசேகர, அனர்த்த முகாமைத்துவ பிரதியமைச்சர் ஆகியோர் எமக்கு வழங்கிய வழிகாட்டலுக்கு எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்ளுகின்றேன். அத்துடன் NBRO இன் உள்ளக முகாமைத்துவ குழு (IMC) எமக்கு வழங்கிய அனைத்து ஒத்துழைப்பிற்கும் அதன் உறுப்பினர்களுக்கு எனது நன்றிகள் உரித்தாகட்டும். அத்துடன் NBRO இன் பணிப்பாளர் நாயகம் மற்றும் அவரது குழுவிற்கு அவர்களது அர்ப்பணிப்பிற்கு எனது மனமார்ந்த நன்றிகளும் வாழ்த்துகளும் உரித்தாகட்டும். இதனைவிட எனது அமைச்சின் கீழுள்ள ஏனைய திணைக்கள தலைவர்கள் மற்றும் பணிப்பாளர் நாயகங்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களுக்கு, அவர்கள் எம்மேல் கொண்ட நம்பிக்கைக்கு எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

NBRO தமது நிறுவன மற்றும் நாட்டின் இலக்குகளை அடைய மேலும் கடினமாக உழைப்பார்கள் என நம்புகின்றேன்.



**எஸ்.எம்.மொஹமட்**
தலைவி, உள்ளக முகாமைத்துவ குழு,
தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்
(செயலாளர்/ அனர்த்த முகாமைத்துவ அமைச்சு)

# நிறைவேற்று அறிக்கை



தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் 31 மார்கழி 2013 முடிவடைந்த ஆண்டிற்கான ஆண்டறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

2013 NBRO வரலாற்றில் அதிக வருமானம் ஈட்டப்பட்ட, அதிக செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்ட, அதிக பெறுமதியுள்ள செயற்த்திட்டங்கள் நடைமுறையிலுள்ள, அதிக ஊழியர்கள் உள்வாங்கப்பட்ட மற்றும் ஊழியர்களுக்கு அதிக பயிற்சிகள் வழங்கப்பட்ட ஆண்டாகும்.

செயற்த்திட்ட நடவடிக்கைகளுக்கு போட்டியான நிலைநிலவுகின்ற போதிலும் NBRO வும் போட்டிகளுக்கு மத்தியில் பல செயற்த்திட்டங்களை வென்றது. இதன் காரணமாக நிறுவன வருடாந்த வருமானம் கணிசமாக அதிகரித்தது. இதனடிப்படையில் NBRO அதன் இலக்குகளை அடைய சவால்மிக்க சமூக பொருளாதார சூழல் காரணிகளை எதிர்கொள்ளக்கொடிய அரச நிறுவனமாக உருவாகியுள்ளது.

NBRO பல செயற்த்திட்டங்களை போட்டித்தன்மையான கேள்விப்பத்திரங்களை தாக்கல் செய்து பெற்றுள்ளதுடன் அரசாங்கமும் நிறுவன உயர் செயற்பாட்டினை கருத்தில் கொண்டு சில செயற்த்திட்டங்களை வழங்கியுள்ளது. இக்காலப்பகுதியில் ஊழியர்களின் செயல்திறன் அதிகரித்துள்ளதுடன் அவர்களது செயற்பாடுகள் கால எல்லைகள் தவறாது மேற்கொண்டார்கள். இதனால் வாடிக்கையாளர்கள் நிறுவன செயற்பாடுகள் தொடர்பில் திருப்தியடைந்துள்ளதுடன் அவர்களது தேவைப்பாடுகளும் சிறப்பான முறையில் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. இதனால் NBRO ஏனைய நிறுவனங்களை விட செயற்த்திட்டங்களுக்கான போட்டித்தேர்வுகளில் சாதகதன்மைகளை கொண்டுள்ளது.

NBRO நாட்டில் மதிக்கப்படும் மற்றும் சிறப்பாக முகாமை செய்யப்படும் நிறுவனமாகும். அத்துடன் நாட்டில் அனர்த்த முகாமைத்துவம், வீடமைப்பு, நிர்மாணம், சூழல் சார்ந்த துறைகளில் நம்பிக்கையான தொழில்நுட்ப சேவை வழங்குனராகவும் உருவெடுத்துள்ளது.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழியங்கும் நிறுவனமென்ற வகையில் NBRO தற்போது அனர்த்தங்களுக்கு தாக்குப்பிடிக்கும் நிலைமையினை முன்னேற்றுவது தொடர்பில் அதிக கவனம் செலுத்தி வருகின்றது. NBRO இனால் மேற்கொள்ளப்பட்ட அண்மைக்கால ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளும் இதனை அடிப்படையாக கொண்டே அமைந்துள்ளன. அரசாங்கத்தினால் NBROஇற்கு ஆய்வு நடவடிக்கைகளுக்கென ஒதுக்கப்பட்ட ரூபா.11 மில்லியனில் பெரும்பகுதி அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான ஆய்வுகளுக்கு பயன்படுத்தப்பட்டது. அந்த ஆய்வுகளில் கண்டறியப்பட்ட விடயங்கள் NBROஇன் வருடாந்த ஆய்வரங்கில் வெளியிடப்பட்டு பகிரப்பட்டன.

நாட்டின் கட்டிட மற்றும் நிர்மாண துறைகளில் அனர்த்தங்களுக்கு

தாக்குப்பிடிக்கும் நிர்மாண எண்ணக்கருக்களை உள்வாங்குவதற்காக "அனர்த்தங்களுக்கு தாக்குப்பிடிக்கும் நிர்மாண கையேடு (Disaster Resilient Construction Manual)" NBRO இனால் ஆய்வு மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளின் கீழ் கல்விசார் மற்றும் துறைசார் நிபுணர்களின் உதவியுடன் தயாரிக்கப்பட்டது. பாடசாலை சூழலில் ஆபத்துக்கள் குறிப்பாக மண்சரிவு ஆபத்துக்கள் இருப்பது தொடர்பில் அடிக்கடி தகவல்கள் வெளியாகின. எனவே இதனை தணிக்க முதலப்படியாக NBRO உள்ளூர்மட்ட இடர் முகாமைத்துவ மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டதுடன் "பாடசாலை மட்ட பாதுகாப்பு கருவிதொகுதிகளையும் (School Safety Toolkit)" உருவாக்கியது.

**மேலும் கணனியை பயன்படுத்தி மண்சரிவு ஆபத்து வலயமாக்கல் தேசப்படங்களை உருவாக்கல் தொடர்பாக ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. வறட்சியை முன்கூட்டியே கணிக்கக்கூடிய கருவியொன்று வறட்சி செறிவு குறிகாட்டியினை பயன்படுத்தி உருவாக்கப்பட்டு வடமத்திய மாகாணத்தில் பரிசோதிக்கப்பட்டது. இந்த ஆய்வின் கண்டுபிடிப்பானது நீர்நிலைகளை கணிப்பவர்களுக்கு அனர்த்த முகாமைத்துவத்திலும், திட்டமிடலாளர்களுக்கு நீர்ப்பாசனம் மற்றும் மின்சக்தி துறைகளிலும், விவசாயிகளுக்கு விவசாய நடவடிக்கைகளுக்கும் உதவும்.**

மற்றொரு ஆய்வு நடவடிக்கையாக பாரம்பரிய ஆற்று மணலை பயன்படுத்தி உருவாக்கப்படும் சீமேந்து கற்களுக்கு பதிலாக நிலக்கரி மின்னுற்பத்தி ஆலைகளிலிருந்து வெளியாகும் அடிக்கரியை பயன்படுத்தி சீமேந்து கற்களை உருவாக்கும் ஆய்வொன்று ஆரம்பிக்கப்பட்டது. இந்த ஆய்வின் பொறியியல் தொடர்பான பகுதிகள் அனைத்தும் திருப்தியாக உள்ள போதும் இந்த கற்களை கொண்டு ஒரு நிஜமான கட்டிடத்தை உருவாக்கி பரிசோதித்த பின்னரே சந்தைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் நிலக்கரி மின்னுற்பத்தி ஆலைகளிலிருந்து வெளியேறும் பறக்கும் சாம்பலை கொண்டு சிலிக்காவை தயாரித்து அதனை கொங்க்ரீட் தயாரிப்பின் போது பயன்படுத்துவது தொடர்பிலும் ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் பாரம்பரிய கொங்க்ரீட்டை விட இந்த புதிய கொங்க்ரீட் பலமானதாக இருக்குமென நம்புகின்றோம். இந்த புதிய கொங்க்ரீட்டானது அனர்த்தங்களுக்கு தாக்குப்பிடிக்கும் நிர்மாண நடவடிக்கைகளுக்கு உசிதமானதாகும்.

## தேசிய அபிவிருத்தியில் பங்களிப்பு

அரசாங்கத்தின் இலக்குகளை அடைய NBRO அனர்த்த இடர்க்குறைப்பினூடாக வறுமையை ஒழிக்கவும் வாழ்க்கை தரத்தை உயர்த்தவும் உதவுகின்றது. அனர்த்தத்தினால் ஏற்படும் உயிரிழப்புக்களை 95% ஆல் குறைக்கவும் சொத்துக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை 40% ஆல் குறைக்கவும் தேசிய இலக்கு எதிர்பார்க்கின்றது. இந்த இலக்கை அடைய NBRO மண்சரிவு இடர்க்குறைப்பு தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்ள பிரதான பங்காற்றுகின்றது.

**இலங்கை அரசின் மானியத்தில் தயாரிக்கப்படும் மண்சரிவு ஆபத்து வலயமாக்கல் மற்றும் தேசப்படங்கள் தொடர்பான நடவடிக்கைகள் தான்** NBRO **இனால் நீண்டகாலமாக மேற்கொள்ளப்பட்டு வந்த செயற்பாடுகளாகும். உள்ளூராட்சி சபைகளின் ஊழியர்களுக்கு** NBRO**இனால் இந்த தேசப்படங்களை**

மண்சரிவு ஆபத்து வலயங்களில் நிர்மாண மற்றும் அபிவிருத்து நடவடிக்கைகளுக்கு அனுமதியளிப்பதற்கு முன்னர் எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பில் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. அந்த நிர்மாண மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மண்சரிவு ஆபத்து வலயங்களில் மேற்கொள்ளப்படுமாயின் NBRO உரிய இடத்திற்கு விஜயம் செய்து அதன் முன்மொழிவுகளை LRAR ஊடாக வழங்கிவருகின்றது. NBRO தற்போது 10 மாவட்ட அலுவலகங்களை மண்சரிவு ஆபத்துள்ள மாவட்டங்களில் கொண்டுள்ளது. இந்த அலுவலகங்கள் LRAR தொடர்பான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன. 2011 பங்குனி முதல் கிடைத்த சுமார் 30,000 LRAR தொடர்பான விண்ணப்பங்களில் ஏறத்தாழ 7500 விண்ணப்பங்கள் 2013 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்டு அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.

மண்சரிவு தொடர்பான முன்னெச்சரிக்கையினை வழங்கல் NBRO இன் முக்கிய பொறுப்பாகும். தற்போது NBRO ஐந்து சுயமாக இயங்கக்கூடிய மழைய அளவிடும் கருவிகளை மண்சரிவு அபாயமுள்ள பகுதிகளில் பொருத்தியுள்ளது. இந்த கருவிகள் அனைத்தும் தொடர்ச்சியாக NBRO இல் உள்ள கணனிகளுக்கு மழைவீழ்ச்சி தொடர்பான தகவல்களை வழங்கிகொண்டு இருக்கும். இதனைவைத்து உடனடி மண்சரிவு தொடர்பான ஆபத்து கணிப்புக்கள் மேற்கொள்ளப்படும். இதன்மூலம் NBRO மண்சர்வு முன்னெச்சரிக்கைகளை விடுப்பதுடன் தேவையான நேரங்களில் மக்களை அவ்விடங்களை விட்டு வெளியேறுமாறும் கூறுகின்றது. UNDP, JICA மற்றும் NGI ஆகியன இந்த நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கின. மேலும் 37 சுயமாக இயங்கக்கூடிய மழைய அளவிடும் கருவிகள் 2013 ஆம் ஆண்டில் முன்னெச்சரிக்கை முறைமையில் இணைக்கப்பட்டுள்ளன.

பேராதெனிய மண்சரிவு தணிப்பு செயற்த்திட்டம் 2009 இல் ஆரம்பிக்கப்பட்டு 2013 இல் நிறைவு செய்யப்பட்டது. ரூபா. 102.7 மில்லியன் செலவில் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த செயற்த்திட்டம் வசிப்பாளர்கள் மற்றும் பயணிப்பவர்களுக்கு நன்மைகளை அளித்துள்ளதுடன் பேராதெனியவை பாதுகாப்பான இடமாக மாற்றியுள்ளது. மண்சரிவு ஆபத்தினை குறைப்பதை முக்கிய நோக்காக கொண்ட NBRO இன் இந்த செயற்பாடு மக்களாலும் உள்ளூர் நிறுவனங்களாலும் பெரிதும் பாராட்டப்பட்டது. இந்த செயற்த்திட்டத்தின் கீழ் பிரதானமாக சாய்வுகளுக்கு பாரமாக அமைந்தவை நீக்கப்பட்டதுடன் வடிகாலமைப்பும் மேம்படுத்தப்பட்டு சாய்வுகள் பலமாக்கப்பட்டன.

பதியப்பளல்ல மண்சரிவு தணிப்பு செயற்த்திட்டம் 2013 நிறைவு செய்யப்பட்டு மக்களுக்கு கையளிக்கப்பட்டது. இதற்காக ரூபா. 49.5 மில்லியன் செலவிடப்பட்டது. பல்வேறு வகையான சாய்வை பலமாக்கும் முறைகள், நிலத்தினை மறுவடிவமைத்தல், புற்தரைகள், புவிமேற்பரப்பு கால்வாய்கள் போன்ற முறைமைகள் இந்த தணிப்பு செயற்த்திட்டத்தின் போது பயன்படுத்தப்பட்டன.

கரந்தியெல மண்சரிவு தணிப்பு செயற்த்திட்டம் 2011 இல் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. சின்ன ரத்தோட்டை மண்சரிவு தணிப்பு செயற்த்திட்டமும்

**2013 இல் ஆரம்பிக்கப்பட்டு தணிப்பு நடவடிக்கைகளுக்கான விரிவான வடிவமைப்புக்கள் தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

**மண்சரிவு ஆபத்துக்களை தணிப்பதற்கான செயற்த்திட்டங்களுக்கான முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டு பல நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டன. JICA நிறுவனம் இனம்காணப்பட்ட உயர் மண்சரிவு அபாயமுள்ள நான்கு இடங்களில் மண்சரிவு ஆபத்து தணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவென மானிய அடிப்படையிலான நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது.**

**உலகவங்கிக்கு கண்டி மாவட்டத்தில் மண்சரிவு ஆபத்து வலயங்களிலுள்ள பாடசாலைகளில் சாய்வுகளை பலமாக்கும் நடவடிக்கைக்கென முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டது. இதனடிப்படையில் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.**

## NBRO இன் நிபுணத்துவத்தை விரிவாக்கல்

நாட்டின் பல்வேறு உட்கட்டமைப்பு விருத்தி செயற்த்திட்டங்களில் NBRO முக்கிய பங்களிப்பு செய்துள்ளது. NBRO பல்வேறு சந்தர்ப்பங்களில் அனர்த்தங்களை எதிர்கொள்ளும் சூழலை நாட்டில் உருவாக்கும் பொருட்டு பல்வேறு புவித்தொழில்நுட்ப ஆய்வுகள் மற்றும் தொழில்நுட்ப சிறப்புத்துறை அறிவுகளை பொறியியல் மற்றும் வடிவமைப்புசார் நடவடிக்கைகளுக்கு வழங்கியது. மேலும் NBRO நாட்டின் அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணத்தின் போது அதீத பங்களிப்பு செய்துள்ளது. தெற்கு அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணத்தின் போது சாய்வுகளை பலமாக்கும் நடவடிக்கைகளுக்கு உதவியது. மேலும் நாட்டின் மத்திய மலைப்பகுதியில் உள்ள பிரதான வீதிகளில் காணப்படும் சாய்வுகளை பலமாக்கும் நடவடிக்கைகளிலீடுபடவென NBRO வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட்டுள்ளது.

மாத்தளை மாவட்டத்திலேற்பட்ட நிலப்பிளவுகள் தொடர்பாக NBRO ஊடுகதிர் ஆய்வுகளை நிலக்கீழ் மேற்பரப்பை பற்றி அறிந்து கொள்ள மேற்கொண்டது. இந்த ஆய்வுகளின் மூலம் நிலக்கீழ் குழிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இது தொடர்பில் மேலும் ஆய்வுகள் மேற்கொள்ளவேண்டியுள்ளதால் NGI இன் உதவி பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. எனவே NBRO மற்றும் NGI இணைந்து நிலக்கீழ் ஆய்வுகளை ராடர் உபகரணங்களை பயன்படுத்தி மேற்கொண்டன. இந்த ஆய்வுகளின் பெறுபேறுகள் நடாத்தப்பட்ட செயலமர்வு ஒன்றில் பகிரப்பட்டன. NBRO இந்த ஆய்வுகளை தொடர்ந்தும் நிலப்பிளவுகளின் பாதிப்புக்களை குறைக்கும் பொருட்டு மேற்கொண்டு வருகின்றது.

VIEE உடன் இணைந்து மேற்கொண்டுவரும் ஆய்வுகள் தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டும் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆய்வுகளில் நீரின் கிடைப்பனவை கண்டறியவென மாதிரி ஒன்றினை உருவக்கும் ஆய்வு முக்கியமானதாகும். இந்த மாதிரி அனைத்து பங்குதாரர்களுக்கும் விளக்கப்பட்டு மீளாய்வு செய்யப்பட்டுள்ளது. காலநிலை மாற்றம் தொடர்பான பிரச்சனைகள், விவசாயம் தொடர்பான தீர்மானமெடுத்தல் மற்றும் மழைவீழ்ச்சியின் போக்கிற்கு இசைவடைந்து கொள்ளல் தொடர்பிலான ஆய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆய்வுகளின் பெறுபேறுகள் காலத்திற்கு

காலம் பங்குதாரர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு மீளாய்வு செய்யப்பட்டன.

நீர்ப்பாசன மற்றும் நீர்வள அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் நீர்த்தேக்க திட்டமிடல் செயற்த்திட்டத்தின் கீழ் நீரின் தரம் மற்றும் வண்டற்படிவு தொடர்பான் ஆய்வு மேற்கொள்ளும் பொறுப்பு NBRO இற்கு அளிக்கப்பட்டது. சுமார் இரண்டு வருட காலத்திற்குமதிகமான சுமார் 50 மில்லியன் வருமானத்தை தரும் இந்த செயற்த்திட்டம், போட்டித்தன்மையான கேள்விமனுக்களுக்கிடையில் வெற்றிகொள்ளப்பட்டது. இத்தகைய செயற்த்திட்டங்கள் NBRO போட்டித்தன்மைகளை எதிர்கொள்ளகூடிய நிறுவனமாக உருவெடுத்துள்ளமைக்கு எடுத்துக்காட்டாகும்.


## பெறுபேறுகள்

NBRO இன் மண்சரிவு இடர்க்குறைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் கடுமையாக அமுல்ப்படுத்தப்பட்டதால் மண்சரிவின் தாக்கவிளைவுகள் நாட்டில் கடந்த தசாப்த காலப்பகுதியில் கணிசமான அளவு குறைவடைந்துள்ளன. மண்சரிவு தேசப்படமாக்கல், கள ஆய்வுகள், தொடர்ச்சியான மண்சரிவு நிலைமைகளை அவதானித்து அவசர நிலைமைகளின் போது முன்னெச்சரிக்கைகளை விடுத்தல், ஆபத்து தணிப்பு மற்றும் தாக்கவிளைவிற்குள்ளாகக் கூடிய சமூகங்களுக்கு தொடர்ச்சியான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு வழங்கல் போன்றன NBRO இனால் நடைமுறைப்படுத்தப்பட்ட மண்சரிவு இடர்க்குறைப்பு நிகழ்ச்சித்திட்டங்களாகும்.


தேசிய அனர்த்த இடர்க்குறைப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் மேற்கூறிய நிகழ்ச்சித் திட்டங்கள் முக்கிய இடம்பெறுவதால் அரசாங்கமும் மலைநாட்டு பகுதியை நன்கு திட்டமிடப்பட்ட இடர் முகாமைத்துவ முறைமைகளினூடாக அனர்த்த நிவாரண மற்றும் மீட்பு பணிகளுக்கு செலவிடும் பணத்தை சேமிக்கும் நோக்கில் முதலீடுகளை மேற்கொண்டுள்ளது.

## வருமானம்

NBRO அதன் நடைமுறை செலவுகளை ஈடுசெய்வதற்கான வருமானத்தை பிரதானமாக அரச மற்றும் தனியார் துறையினருக்கு வழங்கும் ஆலோசனை மற்றும் பரிசோதனை சேவைகள் மூலம் பெறுகின்றது. NBRO அதன் ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் ஏனைய நிறுவன செலவுகளை ஈடுசெய்ய சுயமாக ஈட்டுகின்ற இத்தகைய வருமானத்தில் தங்கியுள்ளது.





*கடந்த ஏழு ஆண்டுகளில் மொத்த வருமானம்*




*கடந்த பத்து ஆண்டுகளில் இலாப நட்டம்*

2010 ஆம் ஆண்டு முதல் NBRO தேறிய இலாபம் ஈட்டிவருகின்றது. இந்த அறிக்கைக்கான நிதியாண்டு காலப்பகுதியில் தான் NBRO அதன் வரலாற்றில் அதிக மொத்தவருமானத்தை ஈட்டியுள்ளது. இந்த மொத்தவருமானமான ரூபா. 261.8 மில்லியனானது முன்னைய 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 25% வளர்ச்சியாகும். இந்த மொத்த வருமானத்தில் ரூபா. 165.82 மில்லியன் பரிசோதனை மற்றும் தொழில்நுட்ப சேவைகள் மூலம் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




*வருமான வகை-2013*

## தடைகள்

NBRO இன் வளர்ச்சியை சில காரணிகள் பாதிக்கின்றன. அவையாவன;

- NBRO இற்கான நகல்சட்டம் தற்போது இறுதிசெய்யப்பட்டு பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக காத்திருக்கிறது.
- NBRO சுயநிதியீட்ட நிறுவனமாக இருப்பினும் பொதுத்துறை நிறுவனங்களுக்கான அனைத்து அரச ஒழுங்குவிதிகளுக்கும் கட்டுப்படவேண்டியுள்ளது. இது பல்வேறுவகையான வாடிக்கையாளர்களின் தேவைகள் மற்றும் செயற்த்திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள தடையாகவுள்ளது.
- ஏனைய நிறுவனங்களால் வழங்கப்படும் சம்பளம், ஏனைய கொடுப்பனவுகள் மற்றும் வசதிகள் காரணமாக NBRO இன் ஊழியர்களை நிறுவனத்தில் தக்கவைத்து கொள்வது கடினமாகவுள்ளது.

## நிறுவன உற்பத்திதிறனை மேம்படுத்த மேற்கொண்ட நடவடிக்கைகள்

2013இல் NBRO குறிப்பிடத்தக்க வளர்ச்சிப்போக்கினை அடைந்துள்ளன. கீழுள்ள நடவடிக்கைகள் இதற்கு சான்றாக அமைந்துள்ளன;

- அனர்த்த முகாமைத்துவ அமைச்சு NBRO இன் செயற்பாட்டு எல்லையை விஸ்தரித்தமை நிறுவனத்தை பலமாக்கியதுடன் செயற்பாட்டுத்திறனையும் மேம்படுத்தியது.
- மூலதன செலவுக்கென திறைசேரியால் வழங்கப்பட்ட நிதி NBRO இன் இயலுமையை விருத்திசெய்ய முக்கிய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு நிறுவனத்தின் முக்கிய ஆய்வுகளை மேற்கொள்ள உதவியது.
- NBRO வருடானந்த மேலதிக கொடுப்பனவு மற்றும் பாவிக்கப்படத மருத்துவ விடுமுறைகளுக்கான பணக்கொடுப்பனவு என்பன ஊழியர்களுக்கு வழங்கப்பட்டன.
- ஊழியர்களுக்கு வெளிநாட்டு பயிற்சிகள் மற்றும் அனுபவ சுற்றுலாக்கள் என்பன வழங்கப்பட்டதன் பின்னர் நிறுவன வினைத்திறன் அதிகரித்துள்ளது.

## எதிர்கால திட்டங்கள்

NBRO நிறுவன கூட்டுத்திட்டத்தின்படி எதிர்வரும் ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்படவேண்டிய முக்கிய செயற்த்திட்டங்களை சுட்டிக்காட்டுகின்றது. அரசாங்க நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் கரந்தியெல

மற்றும் சின்ன ரத்தோட்டை மண்சரிவு தணிப்பு நடவடிக்கைகள் முக்கியத்துவம் கொடுத்தப்பட்டு துரிதப்படுத்தப்பட்டன. பஸன்வத்த பகுதியிலமைந்துள்ள பலமற்ற சாய்வினை பலமாக்கும் நடவடிக்கைகள், கம்பஹா மற்றும் தியத்தலாவ பிரதான பேரூந்து தரிப்பிடம் ஆகிய இடங்களுக்கான பலமற்ற சாய்வுகளை மேம்படுத்தும் நடவடிக்கைகள் 2014 இல் ஆரம்பிக்கப்படும். இதற்கென திறைசேரி நிதி ஒதுக்கியுள்ளது.

நான்கு உயர் மண்சரிவு இடருள்ள பகுதிகளையுள்ளடக்கிய ஒருங்கிணைந்த மண்சரிவு தணிப்பு செயற்த்திட்டம் JICA உதவியுடன் மத்திய மலைநாட்டுப்பகுதியில் மேற்கொள்ளப்படுகின்றது. ஏனைய மண்சரிவு ஆபத்துள்ள பகுதிகளில் தணிப்பு நடவடிக்கைகளை நிதியுதவி எதிர்பார்க்கப்படுகின்றது.

உலகவங்கியின் காலநிலை மாற்றங்களுக்கு இசைவாக்கமடைதல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா. 7 மில்லியன் டொலர் நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் கண்டி மாவட்டத்திலுள்ள 18 பாடசாலை சூழலில் உள்ள பலமற்ற சாய்வினை பலமாக்கும் செயற்த்திட்டம் 2014 ஆம் ஆண்டிலும் நடைமுறைப்படுத்தப்படும்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையிலுள்ள சாய்வினை பலமாக்கும் செயற்பாடுகள் மற்றும் RDA உடன் இணைந்து மேற்கொள்ளும் மத்திய மலைப்பகுதி பிரதான வீதிகளின் பலமற்ற சாய்வுகளை பலமாக்கும் செயற்பாடுகளும் தொடர்ச்சியாக இடம்பெறும்.

## தனியார்துறையினருடனான கூட்டாண்மை

NBRO சிக்கலான செயற்த்திட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்த தனியார் துறையின் தொழில்நுட்ப ரீதியான பங்களிப்பை ஊக்குவிக்கின்றது. இதனால் தனியார் துறையுடன் நெருங்கிய தொடர்புகளை பேணுவது NBRO இற்கு அவசியமாகின்றது.

## நன்றிகளும் பாராட்டுக்களும்

**நான் இந்த சந்தர்ப்பத்தில் கௌரவ.மஹிந்த அமரவீர, அனர்த்த முகாமைத்துவ அமைச்சர், கௌரவ.டுலீப் விஜேசேகர, அனர்த்த முகாமைத்துவ பிரதியமைச்சர் மற்றும் திருமதி.எஸ்.எம்.மொஹமட், செயலாளர், அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் தலைவர், உள்ளக முகாமைத்துவ குழு ஆகியோருக்கு** NBRO **இன் இந்த வெற்றிப்பாதைக்கு வழிகாட்டியமைக்காக நன்றிகளை தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.** **அத்துடன்** IMC **இன் ஏனைய அங்கத்தவர்கள் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு, பாதீட்டுத் திணைக்களம், பொது திறைசேரி, தேசிய திட்டமிடல் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் காலநிலை அவதான திணைக்களம் ஆகியவற்றின் பணிப்பாளர் நாயகங்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும். மேலும் எமது பங்குதாரர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் எம்மேல் கொண்ட தொடர்ச்சியான நம்பிக்கைக்கு எனது நன்றிகள் உரித்தாகட்டும்.**

**எல்லாவற்றிற்கும் மேலாக இந்த வெற்றியினை** NBRO **இன் அர்ப்பணிப்புள்ள ஊழியர்களின் பங்களிப்பின்றி அடைந்திருக்க முடியாது. எமது உழியர்களின் குழுவாக செயற்படும் தன்மை, அறிவு, திறமை மற்றும் தொழில்சார் நிபுணத்துவம் என்பனவே** NBRO **இன் முதுகெலும்பாகும். எமது ஊழியர்களின் சக்தியும் ஆர்வமும்**

அவர்கள் 2013 இல் எதிர்கொண்ட சவால்களை கையாண்ட விதமும் எனக்கு மகிழ்வளிக்கின்றன.

எமது குழு உறுப்பினர்கள் ஒருவரொருவருக்கு ஒத்தாசையாக இருப்பதுடன் தமது எண்ணங்களையும் பகிர்ந்து கொண்டு சிறந்த பெறுபேறுகள் எட்டப்பட காரணமாகவுள்ளனர். எமது நிறுவன இலக்குகளை எட்ட நாமனைவரும் மேலும் ஒன்றிணைந்து பணியாற்றி எமது செயற்பாட்டுத்திறனை மேலும் மேம்படுத்துவோம்.

கலாநிதி ஆசிறி கருணாவர்தன
(பொறியியலாளர்)
பணிப்பாளர் நாயகம்

## எமது தொலைநோக்கு

“பாதுகாப்பான கட்டிட சூழலை உருவாக்குதல்”

## எமது பணிக்கூற்று

ஆராய்ச்சி, அபிவிருத்தியை மேம்படுத்துதல் மற்றும் நிலைத்து நிற்கும் அனர்த்த அபாயக் குறைப்பு மற்றும் பாதுகாப்பான கட்டிட சூழலைக் கட்டியெழுப்புதலுக்காக தொழிநுட்ப சேவைகளை வழங்குதல்

## கூட்டு இலக்குகள்

- DRR தொடர்பான மிகமுக்கிய நிறுவனமாக மாறுவதுடன் பாதுகாப்பான கட்டிட சூழலை உருவாக்குதல்
- நிறுவனரீதியான உறுதித் தன்மையை உருவாக்குதல்
- பொருத்தமான தொழில்நுட்ப சேவை வழங்குனராகமாறுதல்
- மண்சரிவு மற்றும் ஏனைய நிலவியல் தொடர்பான அனர்த்தங்களுக்கான தேசிய ரீதியான முக்கிய நிறுவனமாக செயற்படுதல்
- தொழில்நுட்ப தகவல்மையமாக செயற்படுதல்

# NBRO வின் முகாமைத்துவம்

*தற்போது அமைச்சரவையினால் NBROவிற்கு நிர்வாக, நிதி மற்றும் முகாமைத்துவ தொழிற்பாடுகள் தொடர்பில் ஆலோசனை மற்றும் வழிகாட்டல் வழங்கவென இடைக்கால முகாமைத்துவ குழு ஒன்றினை உரிய அமைச்சின் செயலாளரின் தலைமையில் ஏற்படுத்த ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.*

## பொறுப்பான அமைச்சர்

**கௌரவ. மஹிந்த அமரவீர**
**அமைச்சர், அனர்த்த முகாமைத்துவம்**

**கௌரவ. டுலிப் விஜெசேகர**
**பிரதியமைச்சர், அனர்த்த முகாமைத்துவம்**

## உள்ளக முகாமைத்துவ குழு (IMC)

திருமதி. எஸ்.எம்.மொஹமெட் (தலைவி)
செயலாளர், அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

மேஜர் ஜெனரல். காமினி ஹெட்டியாராய்ச்சி (ஓய்வு)
பணிப்பாளர் நாயகம், அனர்த்த முகாமைத்துவ நிலையம்

திரு. சஞ்ஜீவ விஜெசிங்க
பிரதி பொது முகாமையாளர்,
மத்திய பொறியியல் ஆலோசனை பணியகம் (CECB)

கலாநிதி. ஆசிறி கருணாவர்தன
பணிப்பாளர் நாயகம், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்

திரு. ஜி.எஸ்.குமார
பணிப்பாளர், திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களம்

திரு. எச்.யு.ஆர்.பொன்சேகா,
(பிரதம கணக்காளர், அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

**திரு. லலித் சந்திரபால**
**பணிப்பாளர் நாயகம், காலநிலை அவதான திணைக்களம்**

## கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

திருமதி. எஸ்.கே. சமரசிங்க
கணக்காய்வு அத்தியட்சகர், அரச கணக்காய்வு கிளை

திரு. ஜி.எஸ்.குமார
பணிப்பாளர், திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களம்

திரு. சஞ்ஜீவ விஜெசிங்க
பிரதி பொது முகாமையாளர்,
மத்திய பொறியியல் ஆலோசனை பணியகம் (CECB)

கலாநிதி. ஆசிறி கருணாவர்தன
பணிப்பாளர் நாயகம், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்


திரு. ஆர்.கே.ஜெயவீர,
பணிப்பாளர், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்

திருமதி. டபிள்யு.எ.ஆர்.டி.எஸ். துடுகல,
பிரதிப் பணிப்பாளர் (நிதி), தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்

திரு. பி. ரூபசிங்க
உள்ளக கணக்காய்வாளர்,
தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்

# முகாமைத்துவ கட்டமைப்பு

## தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்- முகாமைத்துவ கட்டமைப்பு




## சிரேஷ்ட முகாமைத்துவம்

பணிப்பாளர் நாயகம்
கலாநிதி. ஆசிறி கருணாவர்தன

பணிப்பாளர், கூட்டாண்மை பிரிவு
திரு.ஆர்.கே.ஜெயவீர

பணிப்பாளர், மனித குடியேற்ற திட்டமிடல் மற்றும் பயிற்சி பிரிவு
திரு.கிஷான் சுகதபால

பணிப்பாளர், கட்டிட மூலப்பொருள் ஆராய்ச்சி மற்றும் பரிசோதனைப்பிரிவு
திரு. கித்சிறி என் பண்டார

பணிப்பாளர், சூழல் கற்கைகள் மற்றும் சேவைகள் பிரிவு
திருமதி- சர்தனீ வி டயஸ்

பணிப்பாளர், மண்சரிவு ஆராய்ச்சி மற்றும் அபாயக்குறைப்பு பிரிவு
திரு.ஆர்.எம்.எஸ்.பண்டார

பணிப்பாளர், செயற்த்திட்ட முகாமைத்துவப் பிரிவு
திரு. எம்.ஐ.டி.எச். விஜேவிக்கிரம

தலைவர், புவித்தொழில்நுட்ப பொறியியல் பிரிவு
திருமதி.எஸ்.முதுரத்ன

# முக்கிய செயற்பாடுகள் 2013

NBRO இன் வளர்ச்சிப் போக்கு கடந்த மூன்று ஆண்டுகளில் சிறப்பாக அமைந்துள்ளது. இதனால் தற்போது தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் நாட்டில் முன்னணி தொழில்நுட்ப சார் சேவை வழங்குனராகவும் நன்மதிப்பு பெற்ற ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனமாகவும் உருவெடுத்துள்ளது. NBRO புவித்தொழில்நுட்ப பொறியியல், கட்டிட மூலப்பொருட் தொழில்நுட்பம், மனித குடியேற்ற திட்டமிடல், சூழல் முகாமைத்துவம் மற்றும் பொறியியல் மற்றும் செயற்த்திட்ட முகாமைத்துவம் உள்ளிட்ட பல பிரிவுகளின் கீழ் மண்சரிவு தணிப்பு, நிலப்பிளவு ஆய்வு, அனர்த்த இசைவாக்கம் மற்றும் வறட்சி ஏற்புத்திறன் போன்ற துறைகளில் நிபுணத்துவமிக்க தொழில்சார் நிபுணர்களை கொண்டுள்ளது.



தற்போது NBRO அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் ஆய்வு அங்கமாகவும் தொழில்நுட்ப சேவை வழங்குனராகவும் தொழிற்படுகின்றது. NBRO நாட்டின் வாழ்வியல் சூழலில் எதிர்கொள்ளும் அனர்த்தம் தொடர்பான பிரச்சனைகளை இனம்கண்டு அவற்றை தீர்க்கும் நோக்கில் தொழில்நுட்பரீதியான பங்களிப்பை செய்து மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தி பேணிப்பாதுகாக்கும் நோக்கில் தொழிற்படுகின்றது.

இந்த ஆண்டு காலப்பகுதியில் NBRO அதன் வருடாந்த செயற்பாட்டுத்திட்டத்திற்கமைவாக கீழ்வரும் செயற்பாடுகளை மேற்கொண்டது;


## இலங்கை அரசாங்கத்தினால் நிதி வழங்கப்பட்ட செயற்த்திட்டங்கள்


### மண்சரிவு ஆபத்து வலய தேசப்படமாக்கல் நிகழ்ச்சித் திட்டம் (LHMP):

மண்சரிவு ஆபத்துள்ள பகுதிகளின் பூகோளரீதியான பரம்பலை இனம்காணும் நோக்கில் 1:10,000 மற்றும் 1:50,000 அளவுத்திட்ட தேசப்படங்களை தயாரிக்கும் நோக்கில் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் இந்த செயற்த்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த செயற்த்திட்டம் ஏறத்தாழ 26,252 சதுர கி.மீ பரப்புள்ள மண்சரிவு ஆபத்துள்ள மாவட்டங்களுக்கென தயாரிக்கப்பட்ட 1:50,000 அளவுத்திட்ட தேசப்படங்கள் தற்போது பொதுமக்கள் பாவனைக்கென வெளியிடப்பட்டுள்ளன. மேலும் 4,440 சதுர கி.மீ பரப்பை உள்ளடக்கிய பகுதிக்கென 110 தேசப்படங்கள் 1:10,000 அளவுத்திட்டத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன. இதன் 2013-2015 காலப்பகுதிக்கென விரிவுபடுத்தப்பட்ட இந்த செயற்த்திட்டத்தின் கீழ் கேகாலை மாவட்டத்தில் 1,389 சதுர கி.மீ, இரத்தினபுரி மாவட்டத்தில் 2,113 சதுர கி.மீ, கண்டி மாவட்டத்தில் 1,860 சதுர கி.மீ மற்றும் நுவரெலியா மாவட்டத்தில் 1,188 சதுர கி.மீ ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த தேசப்படங்கள் மண்சரிவு ஆபத்து மதிப்பீடு, பல்வேறு நிறுவனங்களின் தேசிய மற்றும் பிராந்திய மட்ட திட்டமிடல், மண்சரிவு தொடர்பான முன்னெச்சரிக்கை விடுத்தல் மற்றும் LRAR வழங்கும் செயன்முறை ஆகியவற்றிற்கு பயன்படுத்தப்படுகின்றன. சுமார் 22 மில்லியன் ரூபா செலவில் கேகாலை மாவட்டத்திற்கென 470 சதுர கி.மீ பகுதியை உள்ளடக்கிய பகுதிக்கென 11.8

தேசப்படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அனேகமான இந்த தேசப்படங்களை NBRO இன் இணையத்தில் (www.nbro.gov.lk <http://www.nbro.gov.lk>) பார்வையிடலாம். NBRO அதற்கு அளிக்கப்பட்டுள்ள மிகமுக்கியமான பணியான சீரற்ற காலநிலைகளின் போது மண்சரிவு தொடர்பான முன்னெச்சரிக்கை விடுக்கும் நடவடிக்கையை சிறப்பாக மேற்கொண்டுள்ளது.


A Landslide Hazard Zonation Map



Area Covered under LHMP

## மண்சரிவு இடர் மதிப்பீட்டு அறிக்கை (LRAR)

NBRO மண்சரிவு அபாய பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அனைத்துவித அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் நிர்மாண நடவடிக்கைகள் தொடர்பில் LRAR மற்றும் முன்மொழிவுகளை வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. மேலும் பங்குனி 2011 ஆம் ஆண்டு முதல் கட்டிட அனுமதி பத்திரங்களை பெற LRAR இனை பெற்றுக்கொள்ளுவது உள்ளூராட்சி சபைகளினால் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 30,866 விண்ணப்பங்கள் பெறப்பட்டு 30,281 விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 209 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. 2013 ஆம் ஆண்டில் மாத்திரம் 7,508 விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டன.

இந்த நடவடிக்கைகளுக்கென ரூபா. 32.3 மில்லியன் செலவாகிய அதேவேளை இதில் ரூபா. 22 மில்லியன் இலங்கை அரசினால் வழங்கப்பட்டது. அத்துடன் ரூபா. 6.3 மில்லியன் விண்ணப்பதாரிகளிடமிருந்து பெறப்பட்ட கட்டணத்தின் மூலம் ஈடுசெய்யப்பட்டது. அத்துடன் ரூபா. 4 மில்லியன் NBRO இன் வருமானத்திலிருந்து தேசிய அபிவிருத்தியினை நோக்காக கொண்டு பங்களிப்பு செய்யப்பட்டது.

## மண்சரிவு தொடர்பான விசேட ஆய்வுகள்

**மண்சரிவு ஏற்பட்டால் உயிர் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் NBRO இனால் உரிய மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு மனித குடியேற்றங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பெருந்தோட்ட துறை என்பன தொடர்பிலான இடரினை ஆராய்ந்து முன்மொழிவுகள் வழங்கப்பட்டுள்ளன. மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்கள்/ ஏனைய அரச நிறுவனங்களின் வேண்டுகோளின் பேரில் சுமார் 653 இத்தகைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கென அரசினால் மானியமாக வழங்கப்பட்ட ரூபா. 12.0 மில்லியன் செலவிடப்பட்டது.**

## மண்சரிவு தணிப்பு நடவடிக்கைகள்

### பேராதெனிய மற்றும் பதியப்பளல்ல மண்சரிவு தணிப்பு

NBRO **பேராதெனிய மற்றும் பதியப்பளல்ல மண்சரிவு தணிப்பு நடவடிக்கைகளை அண்மையில் திறைசேரியினால்** 2012 **இல் நிறைவு செய்யப்படவேண்டிய செயற்பாடுகளுக்கான நிதி வழங்கப்படாமையால் நிறுவன நிதியில் இருந்து சுமார் ரூபா**. 13.9 **மில்லியனை செலவு செய்து பூரணப்படுத்தியது. பதியப்பளல்ல மண்சரிவு தணிக்கப்பட்ட பகுதி** 8/**ஆனி**/ 2013 **அன்று நடைபெற்ற வைபவமொன்றில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் திரு. மஹிந்த அமரவீர மற்றும் தனியார் போக்குவரத்து அமைச்சர் திரு. சி.பி. ரத்நாயக்க ஆகியோரால் மக்களிடம் கையளிக்கப்பட்டது.**

பதியப்பளல்ல

மொத்த மதிப்பிடப்பட்ட செலவு: ரூபா. 51.3 மில்
கால எல்லை : 2009 - 2012, (2013)
மொத்த செலவு : ரூபா. 49.51 மில்


தணிப்பு நடவடிக்கைகளுக்கு முன்


தணிப்பு நடவடிக்கைகளின் போது


தணிப்பு நடவடிக்கைகளின் பின்

பேராதெனிய

மொத்த மதிப்பிடப்பட்ட செலவு: ரூபா. 102.0 மில்
கால எல்லை : 2009 - 2012, (2013)
மொத்த செலவு : ரூபா. 102.7 மில்


தணிப்பு நடவடிக்கைகளுக்கு முன்


தணிப்பு நடவடிக்கைகளின் போது


தணிப்பு நடவடிக்கைகளின் பின்

### கரந்தியெல மண்சரிவு தணிப்பு

**கரந்தியெல மண்சரிவு தணிப்பு நடவடிக்கைகள்** 2011 **ஆம் ஆண்டில் கடுமையான மண்சரிவு அச்சுறுத்தலையடுத்து ஆரம்பிக்கப்பட்டது. இந்த நடவடிக்கை ஆபத்துள்ள** 50 **வீடுகளை மீளக்குடியேற்றல், கொத்மலை நகரை வேறு இடத்திற்கு மாற்றல் போன்றவற்றிற்கு மாற்றீடாக ஆரம்பிக்கப்பட்டது.**

மொத்த மதிப்பிடப்பட்ட செலவு: ரூபா. 98.0 மில்
கால எல்லை : 2012-2017

கரந்தியெல மண்சரிவு தணிப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தவென இலங்கை அரசாங்கம் நிதியுதவி வழங்கியது

| மொத்த மதிப்பீட்டு செலவு | ஒதுக்கப்பட்ட நிதி | | | |
|---|---|---|---|---|
| | 2011 | 2012 | 2013 | 2014 |
| ரூபா 98.0 மில் | 5.0 | 14.82 | 29.0 | 30.0 |

இரு கால்வாய்களின் நீரினை திசைமாற்றுவதற்கான நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் திட்டமிட்டபடி ஏறத்தாழ 165 கி.மீ நீளத்திற்கு பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. நிர்மாண நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக மூன்று 50 மீட்டர் ஆழமுள்ள வடிகால் கிணறுகள் சுய நீர்பிறப்பாக்கிகள் பொருத்துவதற்காக தேசிய நீர் வளச்சபையினால் நிர்மாணிக்கப்பட்டது. அரிப்பினை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளும் செயற்படுத்தப்பட்டதுடன் பிரதான நடவடிக்கைகளனைத்தும் 2014 இலும் நடைமுறைப்படுத்தப்படும்.


மண்சரிவு அமைவிடம்


தணிப்பு நடவடிக்கைகளின் போது


பூர்த்தியாக்கப்பட்ட மேற்பரப்பு வடிகால்

## ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

அரசாங்கத்தினால் NBRO இற்கு ரூபா.11 மில்லியன் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வழங்கப்பட்டது. இந்த நிதியானது அனர்த்த இசைவாக்கம் பற்றிய ஆய்வு தொடர்பான செயற்த்திட்டங்களை மேற்கொள்ள வினைத்திறனான முறையில் பயன்படுத்தப்பட்டது. இந்த ஆய்வுகளின் இறுதி பெறுபேறுகள் மார்கழியில் இடம்பெற்ற NBRO இன் வருடாந்த ஆய்வரங்கில் வெளியிடப்பட்டன.

1. **அனர்த்தங்களுக்கு ஒருங்கிசைவாக்கம் தரும் வீடுகள் நிர்மாணம் தொடர்பிலான கையேட்டினை தயாரித்தல்:** வீடுகளை நிர்மாணிப்பவர்கள் மற்றும் நிர்மாணம் தொடர்பிலான தொழில் நிபுணர்கள் அனர்த்தங்களுக்கு தாக்குப்பிடிக்கும் நிர்மாணங்களை மேற்கொள்ளும்போது பின்பற்ற வேண்டிய வடிவமைப்பு, நிர்மாண விடயங்கள் மற்றும் உத்திகளை உள்ளடக்கியதாக இந்த கையேடு தயாரிக்கப்பட்டது.
2. **பாரிய அனர்த்தங்களுக்கு தாக்குப்பிடிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட வீடுகளை நிர்மாணித்தல்**: இந்த ஆய்வின் கீழ் அனர்த்தங்களுக்கு தாக்குப்பிடிக்க கூடிய மாதிரி வீடுகள் வடிவமைக்கப்பட்டு முன்னோடியாக சில வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.
   - 3 மாதிரி வீடுகள் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் மண்சரிவு மற்றும் வெள்ள அனர்த்தங்களுக்கு தாக்குப்பிடிக்கும் வகையில் நிர்மாணம்
   - 3 மாதிரி வீட்டுத்தொகுதிகள் வெள்ளம், மண்சரிவு மற்றும் சுனாமி அனர்த்தங்களுக்கு தாக்குப்பிடிக்கும் வகையில் தேசிய பாதுகாப்பு தினம்-2013 இனை நோக்காக கொண்டு நிர்மாணம்

- 3 மாதிரி வீட்டுத்தொகுதிகள் வெள்ளம், மண்சரிவு மற்றும் சுழல் காற்று போன்ற அனர்த்தங்களுக்கு தாக்குப்பிடிக்கும் வகையில் தயட்டகிருள தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்-2014 இனை நோக்காக கொண்டு நிர்மாணம்.

3. **GIS இனை பயன்படுத்தி தயாரிக்கப்படும் மண்சரிவு தேசப்படங்களின் துல்லியம் தொடர்பான ஆய்வு:** GIS **இனை மண்சரிவு தேசப்படங்களை தயாரிக்கும் போது ஒருங்கிணைத்தல் தொடர்பாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.**
4. **மண்சரிவுகள் தொடர்பில் பாடசாலைகளின் பாதுகாப்பை மதிப்பிடுவதற்கான கருவிகளை உருவாக்கல்:** இந்த ஆய்வின் கீழ் (i) மண்சரிவு, வெள்ளம் மற்றும் சூறாவழி அனர்த்த மட்டங்களை மதிப்பிடல் (ii) பாடசாலைகளுக்கு உகந்த அனர்த்த தணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், (iii) தணிப்பு செயற்த்திட்டங்களை முன்னிலைப்படுத்தல் (iv) புதிய பாடசாலைகளுக்குரிய வடிவமைப்புக்களை வழங்கல் போன்ற நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தும் வகையில் கருவிகள் உருவாக்கப்பட்டன.
5. **தீர்மானங்களை மேற்கொள்ளுபவர்களுக்கு உள்ளூர் மட்ட வறட்சியினை மதிப்பிடும் வகையிலான சுட்டி ஒன்றை தயாரித்தல்:** இந்த ஆய்வின் கீழ் ஈர மற்றும் வரண்ட காலநிலைகளை கடந்த கால தகவல்களை பயன்படுத்தி முற்கணிப்பு செய்யும் வகையிலான சுட்டி ஒன்று தயாரிக்கப்பட்டது. இந்த சுட்டி நீரியலாளர்கள் மற்றும் விவசாய திட்டமிடலாளர்கள் போன்றோருக்கு உரிய தீர்மானங்களை மேற்கொள்ள உதவும்.
6. **மண்சரிவு தணிப்பு நடவடிக்கைகளின் போது மண் துளையிட பயன்படுத்தப்படும் கிடைநிலை துளையிடும் இயந்திரங்களின் விளைதிறனை சரிபார்க்கும் ஆய்வு:** இந்த செயற்த்திட்டத்தின் கீழ் மண்சரிவு இடர்க்குறைப்பு நடவடிக்கைகளின் போதான மண் துளையிடல் மற்றும் கிடைநிலை துளையிடும் இயந்திரங்களின் விளைதிறன் ஆய்வுசெய்யப்பட்டது.
7. **அனல் மின்நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் சாம்பலை கொண்டு நிறைகுறைந்த கட்டிட நிர்மாண கற்களை உருவாக்குதல்:-** இந்த செயற்த்திட்டத்தின் கீழ் மின்நிலையங்களிலிருந்து கிடைக்கும் கீழ்மட்ட சாம்பலை கொண்டு புதிய வகையான சீமெந்து கற்களை அமைப்பது பரீட்சிக்கப்பட்டது. இங்கு பாரம்பரியமாக சீமெந்துக்கல் தயாரிக்க பயன்படுத்தப்படும் மணலுக்கு பதிலாக சாம்பல் பயன்படுத்தப்பட்டது.
8. **பறக்கும் சிறிய சாம்பல் துகள்களை கொண்டு கொங்க்ரீட்டின் இயல்புகளை அதிகரித்தல்:** சிறிய சாம்பல் துகள்களை கொண்டு கொங்க்றீட்டின் இயல்புகளை அதிகரிப்பது தொடர்பாக இந்த ஆய்வினூடாக ஆராயப்பட்டது. இந்த ஆய்வில் கண்டறியப்பட்ட விடயங்கள் புதிய கொங்க்றீட் அமைப்புக்களினை பலமானதாக உருவாக்கவும் அனர்த்தங்களுக்கு தாக்குப்பிடிக்கக் கூடிய இயல்புகளை கொண்டதாக உருவாக்கவும் உதவும்.
9. **இலங்கையின் மத்திய மலைநாட்டுப்பகுதியில் உள்ள நிறைசெறிவூட்டப்பெறாத பக்கவாட்டில் உள்ள மண்ணின் புவித்தொழில்நுட்ப இயல்புகள் பற்றிய ஆய்வு:** இந்த செயற்த்திட்டத்தின் கீழ் மத்திய மலைநாட்டுப்பகுதியில் பல இடங்களிலிருந்து பல்வேறுவகையான மண் சேகரிக்கப்பட்டு அவற்றின் இயல்புகள் ஆய்வு செய்யப்பட்டது.
10. **மண்சரிவு ஆபத்தின் தன்மை பற்றி அறிய நில அதிர்வுகள் தொடர்பான முதற்கட்ட கள ஆய்வு:** நில அதிர்வுகள் மண்சரிவுகளை தூண்டக்கூடுமாதலால் இந்த செயற்த்திட்டத்தின் கீழ் எவ்வாறு நில அதிர்வுகளை கண்காணிக்க


முடியும், அதன் மூலம் எவ்வாறு மண்சரிவினை முற்கணிப்பிட முடியும் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன.

11. **நில அடுக்குகள் கீழ் நோக்கி வருதல் தொடர்பான நலிவுறும் தாக்கவிளைவு மற்றும் இடர் மதிப்பீடு:** இந்த செயற்த்திட்டத்தின் கீழ் தடுக்கத்தக்க நிலை தொடர்பான ஆய்வு (resistivity analysis) மூலம் நிலக்கீழ் வெடிப்புக்களை கண்டறிய தெரிவு செய்யப்பட்ட இடங்களில் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வினை அடிப்படையாக கொண்டு நலிவுறும் தாக்கவிளைவு மற்றும் இடர் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. மேலும் நிலக்கீழ் பிளவுகளை ஏற்படுத்தும் நீரியல் தன்மைகள் மற்றும் வாயு அமுக்கம் மற்றும் இரசாயன தாக்கங்கள் பற்றிய ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆய்வுகளில் கண்டறியப்பட்ட விடயங்கள் நிலக்கீழ் தேசப்படங்களை உருவாக்க மற்றும் நிலக்கீழ் ஆபத்துள்ள இடங்களில் நிர்மாணங்களை மேற்கொள்ளும்போது பயன்படுத்த வேண்டிய வடிவமைப்புக்கள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ள பயன்படுத்தப்பட்டது.
12. **களுத்துறையிலுள்ள ரிதிவிட்ட, பதல்வத்த ஆகிய இடங்களில் ஏற்பட்ட நிலப்பிளவுகள் தொடர்பான முப்பரிமாண ஆய்வு:** இந்த செயற்த்திட்டத்தின் கீழ் ரிதிவிட்ட, பதல்வத்த ஆகிய இடங்களில் ஏற்பட்ட நிலக்கீழ்ப்பிளவுகள் ஆராயப்பட்டன.
13. **மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டத்திற்கான இடர் முகாமைத்துவம்**: நிலப் பிளவுகள் மாத்தளை மாவட்டத்தில் முக்கிய பிரச்சனையாகவுள்ளது. இந்த ஆய்வின் கீழ் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான இடர் முகாமத்துவ திட்டம் ஒன்றை தயாரித்தல் தொடர்பாக ஆராயப்பட்டது.

## 2013 இல் எட்டிய முக்கிய அடைவுகள்


Use of nano fly ash

- அனல் மின்நிலையங்களிலிருந்து கிடைக்கும் சாம்பலை பயன்படுத்தி நிறைகுறைந்த கட்டிட கற்களை தயாரித்தல்.
- LHMP தயாரிப்பு முறைமையை வினைத்திறனாக மாற்ற கணனி மயப்படுத்தப்பட்ட செயல்முறை ஒன்று அறிமுகம் செய்யப்பட்டது.
- அனர்த்தங்களுக்கு தாக்குப்பிடிக்க கூடிய வீடுகளை நிர்மாணிப்பது தொடர்பிலான கையேடு
- உள்ளூர் மட்ட தீர்மானமெடுப்பவர்களுக்கான வறட்சி சுட்டி ஒன்று அறிமுகம் செய்யப்பட்டது.
- 2013 இற்கான NBRO ஆய்வரங்கு வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டத



Disaster resilient housing manual



Construction of model houses

### உபகரண கொள்வனவு

பொது திறைசரியினால் ரூபா. 18.0 மில்லியன் ஆய்வு கூட மற்றும் கள உபகரணங்களை கொள்வனவு செய்து NBRO இன் இயலுமையை விருத்தி செய்ய ஒதுக்கப்பட்டது. இதனடிப்படையில் இந்த மானியத்தை பயன்படுத்தி கள உபகரணங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார் சில முக்கிய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

## பிரதான ஆலோசனை சேவைகள்

### நீர்த்தேக்கங்களின் நீரின் தரம் மற்றும் வண்டல் படிவுகள் தொடர்பான ஆய்வுகள்

நீர்ப்பாசன மற்றும் நீர் வள முகாமைத்துவ அமைச்சின் அணைக்கட்டுக்களின் பாதுகாப்பு மற்றும் நீர் வள முகாமைத்துவ செயற்த்திட்டத்தின் கீழ் நீர்த்தேக்கங்களின் நீரின் தரம் மற்றும் வண்டல்படிவு தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுவரும் ஆய்வு 2015 வரை இடம்பெறும். அதன் விபரங்கள் வருமாறு;

மொத்த செயற்த்திட்ட பெறுமதி- ரூபா. 64.7 மில்லியன் (போட்டித்தன்மையான கேள்விப்பத்திர தாக்கல் மூலம் பெறப்பட்டது)
சேவையுறுனர்: அணைக்கட்டுக்களின் பாதுகாப்பு மற்றும் நீர் வள முகாமைத்துவ செயற்த்திட்டம், நீர்ப்பாசன மற்றும் நீர் வள முகாமைத்துவ அமைச்சு.
செயற்த்திட்ட காலம்: ஆனி 2013-பங்குனி 2015

ஆய்வு:

- நீர்த்தரம் தொடர்பான தகவல்களின் பகுப்பாய்வு-பொல்கொல்ல, கொத்மலை, கலாவாவி
- ஆற்றுப்பள்ளத்தாக்குகளின் நீர் தரத்தினை கண்காணித்தல், நீர்த்தேக்கங்களான பொல்கொல்ல, கொத்மலை மற்றும் கலாவாவி போன்றவற்றின் நீர் தரத்தினை கண்காணித்தல்.
- பொல்கொல்ல நீர்த்தேக்கத்திற்கான ஆற்றுப்பள்ளத்தாக்கு முகாமைத்துவ திட்டத்தினை தயாரித்தல்
- பொல்கொல்ல, இங்கினிமிட்டிய, கலாவாவி மற்றும் ரந்தம்பே போன்ற நீர்நிலைகளில் ஆழங்கள் தொடர்பான ஆய்வு
- மஹாவலி அதிகார சபைக்கான நீர்த்தர கண்காணிப்பு மற்றும் நீர்நிலைகளின் ஆழங்களை கண்டறியும் கருவிகளின் கொள்வனவு




நீர்நிலைகளின் நீரின் தரத்தினை கண்காணித்தல்


### ஏனைய ஆய்வுகள்


ஏனைய முக்கிய ஆய்வுகளாவன;




- சுற்றாடல் அமைச்சின் பவித்ர ஆற்று செயற்த்திட்டத்தின் கீழ் நீர்த்தரம் தொடர்பான தகவல்களை வியாக்கியானம் கூறவும் பகிர்ந்து கொள்ளவும் ஏதுவாக இணைய மென்பொருள் ஒன்றை உருவாக்குதல்
- மொரகொல்ல நீர்மின்னுற்பத்தி செயற்த்திட்டத்திற்கென நிப்பொன் கொய் நிறுவனத்திற்காக சூழல் சாத்தியக்கூறுகள் தொடர்பான ஆய்வு, விபரமான வடிவமைப்புக்களை தயாரித்தல் மற்றும் கேள்விப்பத்திர ஆவணங்களை தயாரித்தல் போன்ற மேலதிக செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

### இலங்கையின் பிரதான நகரங்களின் வளியின் தரத்தினை ஆய்வு செய்ய 2013இன் வளி தர கண்காணிப்பு தொழில்நுட்ப முறைமைகளை கொண்டு பொருத்தமான கொள்கை மற்றும் செயல்முறைமையினை வகுத்தல்





மோட்டார் போக்குவரத்து திணைக்களம் சுற்றாடல் மற்றும் இயற்கை வள அமைச்சுடன் இணைந்து நாட்டின் முக்கிய நகரங்களில் குறிப்பாக மாகாண தலைநகரங்களில் வளியின் தரம் பற்றிய தகவல்களை பெறுவதற்காக திட்டமொன்றை அமுல்ப்படுத்தியது. இதன்மூலம் கிடைக்கும் பெறுபேறுகளை கொண்டு வாகனங்களின் புகைவெளியிடுகையினை பரீட்சிக்கும் முறைமை ஒன்று ஆறு மாகாணங்களில் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளது. இந்த திட்டத்தில் NBRO பிரதான நகரங்களான கொழும்பு, கம்பஹா, களுத்துறை, இரத்தினபுரி மற்றும் காலி ஆகியவற்றில் வளியின் தரமட்டங்களை பரீட்சிக்கும் நடவடிக்கையிலீடுபட்டது.


நிதி உதவி:- வாகனங்களை பதிவு செய்யும்போதான வாகன புகைவெளியிடும் பரிசோதனை மூலம் கிடைக்கும் பணம்

நோக்கம்: பிரதான நகரங்களுக்கான வளியின் தரம் பற்றிய தகவல் தளம் ஒன்றை ஏற்படுத்தல்

செயல்முறை: வளியின் தரத்தினை குறைந்த முதலீட்டு மாதிரிக்கூற்று முறைகளை பயன்படுத்தி கண்காணித்தல்

இலக்கு: பகுப்பாய்வு செய்யப்பட்ட தகவல்களை பயன்படுத்தி நகர வளி தர முகாமைத்துவம்




மற்றும் போக்குவரத்து திட்டமிடலின் போது வாகன புகை வெளியிடுகை கட்டுப்படுத்துகை தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளல்.

செயற்த்திட்ட கூறுகள்

1. கொழும்பு, கம்பஹா, களுத்துறை, இரத்தினபுரி மற்றும் காலி- ஒதுக்கீடு- ரூபா. 1.90 மில்லியன் (2012-2103 காலப்பகுதி)

2. கண்டி, குருனாகல், அனுராதபுரம் மற்றும் பதுளை- ஒதுக்கீடு- ரூபா 1.50 மில்லியன் (2013-2014 காலப்பகுதி)

ஆய்வு செயல்முறை:

நாட்டின் முக்கிய இடங்களில் மாதிரிக்கூறுகளுக்கமைய மேற்கொள்ளப்பட்டது. கொழும்பு (19), கம்பஹா (11), களுத்துறை (05), இரத்தினபுரி (11), காலி (06), ஹொரணை (05). $SO_2$ மற்றும் $NO_2$ ஆகியவற்றின் மாதாந்த சராசரி வீச்சுத்தன்மையும் அளவிடப்பட்டது.

## புவித்தொழில்நுட்ப ஆய்வு செயற்த்திட்டங்கள்

NBRO புவித்தொழில்நுட்ப ஆய்வுகளை நாட்டின் முக்கிய உட்கட்டமைப்பு செயற்த்திட்டங்களுக்கு மேற்கொண்டது. இவற்றுள் நிலம் தொடார்பான ஆய்வு மற்றும் ஆய்வுகூடங்களில் மேற்கொண்ட பூகோள மூலப்பொருட்கள் சம்மந்தமான ஆய்வு என்பன இவற்றுள் உள்ளடங்கும். மேலும் வித்தியாசமான மணலின் வகைகளுக்கேற்ற நிர்மாண முறைமைகள் தொடர்பான ஆய்வுகளும் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

## கொடகம முதல் அண்டரவெவ வரையிலான அதிவேக நெடுஞ்சாலைக்கான மண் பரிசோதனை
### கட்டம் II- பெலியத்த முதல் அண்டரவெவ

சேவையுறுனர்: வீதி அபிவிருத்தி அதிகாரசபை
ஆய்வுசெய்யப்பட்ட ஆழ்துளைகள்: 43
செயற்த்திட்ட காலப்பகுதி: 2 மாதங்கள்
செயற்த்திட்ட செலவு: ரூபா. 8.6 மில்லியன்
செயற்த்திட்ட போக்கு: முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ளது.


புவித்தொழில்நுட்ப ஆய்வுகள் நடைபெறும்போது

## கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவ செயற்த்திட்டத்திற்கான மண் தொடர்பான ஆய்வுகள்
### கிருலப்பனை தெற்கு பகுதி

சேவையுறுனர்: உள்ளூராட்சி மற்றும் மாகான
ஆய்வுசெய்யப்பட்ட ஆழ்துளைகள்: 58
செயற்த்திட்ட காலப்பகுதி: 2 மாதங்கள்
செயற்த்திட்ட செலவு: ரூபா. 4.4 மில்லியன்
செயற்த்திட்ட போக்கு: முழுமையாக நிறைவ


புவித்தொழில்நுட்ப ஆய்வுகள் நடைபெறும்போது

### கிருலப்பனை வடக்கு பகுதி
ஆய்வுசெய்யப்பட்ட ஆழ்துளைகள்: 69
செயற்த்திட்ட காலப்பகுதி: 1.5 மாதங்கள்
செயற்த்திட்ட செலவு: ரூபா. 5.04 மில்லியன்
செயற்த்திட்ட போக்கு: தற்போது நடைபெறுகின்றது

## மீதோட்டமுல்ல கழிவு அகற்றும் பகுதிக்கான மண் தொடர்பான ஆய்வுகள் மற்றும் முன்மொழிவுகள்

சேவையுறுனர்- கொழும்பு மாநகர சபை
செயற்த்திட்ட செலவு: ரூபா. 2.40 மில்லியன்

மேற்கொள்ளப்பட்ட விரிவான ஆய்வுகளின் படி நிலத்தின் அடியில் வண்டல் படிவுகள் காரணமாக மென்மையான மண் படைகள் உருவாவது கண்டுபிடிக்கப்பட்டது. இதன் காரணகாக மண் மற்றும் குப்பை குகடுகள் சரிந்து விழாதவாறு ஒரு தடுப்பு கட்டமைப்பு ஒன்றை அமைப்பது சாத்தியமானதும் சிக்கனமானதுமான முறைமையாக முன்மொழியப்பட்டுள்ளது.



மீதொட்டுமுல்ல கழிவகற்றும் பகுதியில் ஆய்வுகள் மேற்கொள்ளும்போது

## செயற்த்திட்ட முகாமைத்துவ நடவடிக்கைகள்

NBRO சில முக்கிய நிர்மாண செயற்த்திட்டங்களுக்கு செயற்த்திட்ட முகாமைத்துவ சேவைகளை வழங்கியுள்ளது. NBRO கட்டிடங்களின் தன்மையினை மதிப்பிடுதல், பாதிக்கப்பட்ட கட்டிடங்களை மதிப்பிடல் மற்றும் அறிக்கைகள் தயாரித்ல, முன்மொழிவுகளை வழங்கல் போன்ற சேவைகளை வழங்கியது. நிறுவனத்தின் இந்த சேவைகளுக்கு அண்மைக்காலங்களில் சிறந்த கேள்வி உள்ளது.

## செயற்த்திட்டம்- தேசிய அணு சக்தி அதிகாரசபையின் அழிக்க முடியாத பரிசோதனைக்கான நிலைய நிர்மாணம்

சேவையுறுனர்- அணுசக்தி அதிகாரசபை

தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சின் அணுசக்தி அதிகார சபையின் அழிக்க முடியாத பரிசோதனைக்கான நிலைய நிர்மாணம் தற்போது நடைபெற்று வருகின்றது. இதற்கான மொத்த மதிப்பிடப்பட்ட செலவு ரூபா. 345 மில்லியன்.

PMD க்கு நிர்மாண நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல், ஒப்பந்தக்காரரான இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கான கொடுப்பனவுகளை அத்தாட்சிப்படுத்தும் நடவடிக்கைகள் அளிக்கப்பட்டன.

NBRO இற்கான செலவு- ரூபா. 3.1 மில்லியன்
செயற்த்திட்ட போக்கு- நடைபெறுகின்றது



நிர்மாண நடவடிக்கைகள் நடைபெறும்போது

## செயற்த்திட்டம்- திருகோணமலை-கந்தளாய் வீதி பகுதியில் கட்டிடங்களுக்கு ஏற்பட்ட வெடிப்பு தொடர்பான சுயாதீன விசாரணை

**சேவையுறுனர்: உலக வங்கியின் நிதியுதவியுடனான வீதி அபிவிருத்தி செயற்த்திட்டம்**

PMD ஆனது 88 வீடுகள் மற்றும் வர்த்தக கட்டிடங்களின் வெடிப்பு தொடர்பான கள ஆய்வினை கந்தளாய்-திருமலை பிரதான வீதியில் மேற்கொண்டது.



கட்டிட வெடிப்புக்களை காட்டும் சில புகைப்படங்கள்

# ஏனைய வருமானம் ஈட்டும் செயற்பாடுகள்

- மண்சரிவு ஆய்வுகள் மற்றும் சேவைகள், புவித்தொழில்நுட்ப பொறியியல், செயற்த்திட்ட முகாமைத்துவ சேவைகள், கட்டிட மூலப்பொருட்கள், மனித குடியேற்ற திட்டமிடல் மற்றும் சூழல் முகாமைத்துவம் போன்ற துறைகளில் தொழில்நுட்ப ஆலோசனை சேவைகளை நிறுவனம் வழங்கியது. இதன் காரணமாக நிறுவன நிதியியல் நிலையேற்றத்தன்மை மேம்பட்டது.
- NBRO கட்டிட மூலப்பொருள் பரிசோதனை மற்றும் கட்டிடங்கள் மற்றும் அமைப்புக்களின் நிலையினை பரிசோதிக்கும் சேவைகளையும் தொடர்ச்சியாக வழங்கியது.
- NBRO தொடர்ச்சியாக நீரின் தரத்தினை பரிசோதித்தல், கழிவுநீர், வளியின் தரம், வெளியேற்றங்கள், ஒலி மட்டங்கள் மற்றும் அதிர்வுகள் போன்றன தொடர்பில் சூழல் சார் ஆய்வுகளை ஆலோசனை சேவைகளின் கீழ் மேற்கொண்டது. இத்தகைய ஆய்வுகள் நாட்டில் அமுல்ப்படுத்தப்பட்ட பிரதான உட்கட்டமைப்பு விருத்தி செயற்பாடுகளிலும் மேற்கொள்ளப்பட்டது. அவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன

| செயற்பாடு/பிரிவு | ஆலோசனை சேவைகள் | பரிசோதனை சேவைகள் | ஈட்டப்பட்ட மொத்த வருமானம் (ரூபா மில்லியனில்) |
|---|---|---|---|
| மண்சரிவு ஆய்வுகள் மற்றும் இடர் முகாமைத்துவ பிரிவு | 1375 | - | 34.58 |
| புவித்தொழில்நுட்ப பொறியியல் மற்றும் பரிசோதனை பிரிவு | 41 | 31 | 36.13 |
| சூழல் கற்கைகள் மற்றும் சேவைகள் பிரிவு | 3 | 496 | 31.15 |
| கட்டிட மூலப்பொருள் ஆராய்ச்சி மற்றும் பரிசோதனை பிரிவு | - | 2,389 | 27.54 |
| செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவு | 55 | - | 19.66 |
| மனித குடியேற்ற திட்டமிடல் மற்றும் பயிற்சி பிரிவு | 10 | - | 10.14 |
| **மொத்தம்** | **1,484** | **2,916** | **159.20** |

# வெளிநாட்டு இணைவாக்கத்திலான செயற்த்திட்டங்கள்

## NBRO - NGI / RNE (கொழும்பு) தொழில்நுட்ப கூட்டுறவுச் செயற்த்திட்டம்

NBRO நோர்வே புவித்தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து "NBRO-NGI இணைந்த காலநிலை மாற்றத்தால் உருவாகும் இயற்கை அனர்த்தங்களை தணிக்கும் கூட்டுச்ச்செயற்த்திட்டம்" ஒன்றை ஆரம்பித்தது. இந்த கூட்டிணைவு மூலம் இரு தரப்புக்களும் (NBRO மற்றும் NGI) புவியியல் சார்ந்த ஆபத்துக்கள் குறிப்பாக மண்சரிவு மற்றும் அது பற்றிய பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பது தொடர்பில் தத்தமது அனுபவங்களை பகிர்ந்து கொண்டன. இந்த செயற்த்திட்டத்திற்குரிய நிதியுதவியானது இலங்கைக்கான நோர்வே நாட்டுத்தூதரகம் ஊடாக வழங்கப்பட்டது. மேலும் சுயமாக இயங்கக்கூடிய மழை அளவீடும் கருவிகள் சிலவும் இந்த செயற்த்திட்டத்தின் கீழ் பொருத்தப்பட்டன.

NBRO - NGI இணைந்து மாத்தளை பகுதியில் இடம்பெற்ற நிலப்பிளவுகள் தொடர்பான ஆய்வுகள் மற்றும் தணிப்பு உபாயங்களை உருவாக்குதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டது. நோர்வே அரசாங்கம் NGI ஊடாக NBRO அலுவலகர்களுக்கு உரிய பயிற்சிகளை வழங்கியதுடன் நிலத்தினை ஊடறுத்து செல்லும் ராடர் (Ground Penetration Radar-GPR) கருவி ஒன்றை வாங்குவதற்கான நிதியினையும் மானியமாக வழங்கியது. மேலும் INSAR செய்மதி படங்கள் மற்றும் வான்வெளியிலிருந்து எடுக்கப்பட்ட நிழற்படங்கள் போன்றனவற்றையும் இவை வழங்கின. இந்த செயற்த்திட்டம் 2014 ஆண்டு ஆனி மாதம்வரை இடம்பெறும்.



NBRO & NGI குழுவினால் மேற்கொள்ளப்பட்ட நிலப்பிளவு தொடர்பான ஆய்வுகள்

## NBRO-VIEE தொழில்நுட்ப கூட்டு ஒத்துழைப்பு செயற்த்திட்டம்



NBRO அமெரிக்காவின் VIEE நிறுவனத்துடன் இணைந்து "இலங்கையின் மழைவீழ்ச்சியின் போக்கிற்கமைய விவசாயம் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளலும் ஏற்புத்திறனும் (Agricultural Decision-making and Adaptations to the Precipitation Trends in Sri Lanka-ADAPT-SL)" என்ற ஐந்து வருட செயற்த்திட்டம் 2012இல் ஆரம்பிக்கப்பட்டது. இந்த ஆய்வானது பிராந்திய மட்ட வறட்சி சுட்டிகளை உருவாக்கி அதன் மூலம் குறுங்கால மற்றும் நீண்ட கால வறட்சி நிலமைகளை முற்கணிப்பு செய்வதனை நோக்காக கொண்டுள்ளது. நீர்த்தட்டுப்பாடு தற்போது வளர்ந்து வரும் பிரச்சனையாக உள்ளது. இதன் காரணமாக விவசாயிகளும் பாரம்பரிய விவசாய முறைகளை கைவிட்டு சூழ்நிலைக்கேற்ப நீரினை





வெவ்வேறு இடங்களில் மாதிரிகளை எடுத்தல்

முகாமைசெய்யும் வகையில் புதிய முறைகளை கடைப்பிடிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த ஆய்வானது உளவியல், சமூகவியல், நீரியல் மற்றும் பொறியியல் போன்ற துறைகள் தொடர்பில் மஹாவலி ஆற்று விவசாயிகளுக்கு உள்ள பிரச்சனைகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

VIEE மற்றும் NBRO இணைந்து உலர்வலயத்தில் ஐந்து சமூகங்களில் வாழும் 193 விவசாயிகளிடையே முன்னோடி மதிப்பாய்வு ஒன்றை மேற்கொண்டனர். இந்த மதிப்பாய்வில் விவசாய முறைகள், சூழல் மாற்றம் தொடர்பான நோக்கு, நீர்ப்பற்றாக்குறை தொடர்பான நோக்கு, வறட்சியை எதிர்கொள்ளும் நோக்கில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் தகவல் சேகரிக்கப்பட்டன..

இந்த செயற்த்திட்டத்தின் கீழ் NBRO காலநிலை ஆராய்ச்சி பிரிவு (Climate Research Unit - CRU) ஒன்றை மனித குடியேற்ற திட்டமிடல் மற்றும் பயிற்சி பிரிவின் கீழ் ஏற்படுத்தியது. மேலும் VIEE நீர்த்தர பரிசோதனை உபகரணங்களை NBRO இற்கு இந்த செயற்த்திட்டத்தின் கீழ் வழங்கியது.

### UNDP-NBRO தொழில்நுட்ப கூட்டிணைவினாலான சுய மழைவீழ்ச்சியை அளவிடும் கருவிகள் மூலமான மண்சரிவு முற்கணிப்பு மற்றும் முன்னெச்சரிக்கை செயற்த்திட்டம்

2013 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த செயற்த்திட்டத்தின் கீழ் 35 சுயமாக இயங்கும் மழை அளவிடும் கருவிகள் பதுளை, கண்டி, கேகாலை, குருணாகல், மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் முன்னரே தெரிவுசெய்யப்பட்ட இடங்களில் பொருத்தப்பட்டன. இந்த சுயமாக இயங்கும் மழை அளவிடும் கருவிகள் குறித்த மாவட்டங்களிலுள்ள கிராமிய மக்களுக்கு மண்சரிவு பற்றிய முன்னெச்சரிக்கை வழங்கவென தரவுகளை வழங்குகின்றன. NBRO இன் மண்சரிவு ஆராய்ச்சி மற்றும் இடர் முகாமைத்துவ பிரிவு ரூபா. 18.70 மில்லியன் செலவில் UNDP இன் அனர்த்த இடர் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் USAIDஇனால் மானிய அடிப்படையில் வழங்கப்பட்ட நிதியுதவியுடன் இந்த செயற்த்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.





சுயமாக இயங்கும் மழைமானிகளின் பொருத்துகை


# நிதி சார்ந்த முக்கிய விடயங்கள்

2013இல் NBRO ரூபா. 261.8 மில்லியனை மொத்த வருமானமாக ஈட்டியது. இது முன்னைய ஆண்டைவிட 25% வளர்ச்சியாகும்.


NBRO இன் வழக்கமான நடவடிக்கைகள் மூலமான வருமானம் ரூபா.165.82 மில்லியனகும். இது 2013ஆம் ஆண்டில் 13.7% வளர்ச்சியை காட்டியது. நிறுவன நடைமுறை செலவை ஈடுசெய்ய நிறுவனம் ஆலோசனை சேவைகள் மூலமான வருமானத்தில் அதிகம் தங்கியிருக்க வேண்டியுள்ளது.

கரந்தியெல மண்சரிவு நடவடிக்கைகளுக்காக ரூபா. 29.0 மில்லியன் அரச மானியமாக கிடைக்கப்பெற்றது. இதனைவிட திறைசேரியினால் பேராதெனிய மற்றும் பதியப்பளல்ல மண்சரிவு தணிப்பு நடவடிக்கைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி 2012ஆம் ஆண்டின் நிறைவில் போதியளவு கிடைக்காமையால் ரூபா. 13.96 மில்லியன் முக்கிய வேலைகளுக்கென NBRO வருமானத்தில் இருந்து பயன்படுத்தப்பட்டது.


NBRO இன் 10 மண்சரிவு ஆபத்துள்ள மாவட்டகங்களில் அலுவலகங்கள் 2011 மார்ச் மாதம் முதல் LRAR மதிபீட்டறிக்கைகளை வழங்குவதற்காக இயங்கி வருகின்றன. இந்த அலுவலகங்களுக்கென ரூபா.32.3 மில்லியன் தேவைப்பட்டது. இதில் ரூபா.22.0 மில்லியன் திறைசேரியால் வழங்கப்பட்டது. மேலும் ரூபா. 6.30 மில்லியன் LRAR விண்ணப்பக் கட்டணங்கள் மூலம் பெறப்பட்டது. மிகுதி ரூபா. 4.0 மில்லியன் NBRO இன் வருமானத்திலிருந்து செலவு செய்யப்பட்டது.





வகைரீதியாக மொத்த வருமானம்





பரிசோதனை மற்றும் ஆலோசன சேவை வருமானம்




மண்சரிவு தணிப்பு பாதீடு




ஆராய்ச்சி மற்றும் கொள்வனவு மானியம்




மொத்த வருமானம்

மேலும் LHMP இற்கென ரூபா.22.0 மில்லியன் ஆராய்ச்சி அபிவிருத்திக்கான ரூபா. 11.0 மில்லியனுடன் மானியமாக கிடைத்தது. விசேட மண்சரிவு விசாரணைகளுக்கென ரூபா. 12.0 மில்லியன் மற்றும் ஆய்வுகூட மற்றும் கள ஆய்வு உபகரணங்களுக்கென ரூபா.18.0 மில்லியன் திறைசரியிடமிருந்து மானியமாக கிடைத்தது.

2013 இற்கான மொத்த தொழிற்பாட்டு வருமானம் ரூபா.261.8 மில்லியன் மற்றும் மொத்த தொழிற்பாட்டு செலவு ரூபா. 240.03 மில்லியன். எனவே மொத்த இலாபத்தில் ஏற்பட்ட செலவுகள் ரூபா. 13.9 மில்லியனை கழித்து தேறிய இலாபமாக ரூபா. 11.22 மில்லியன் பெறப்பட்டது. இந்த ரூபா.13.9 ,இல்லியன் பேராதெனிய மற்றும் பதியப்பளல்ல மண்சரிவு தணிப்பு நடவடிக்கைகளுக்கான NBROஇனால் செலவு செய்யப்பட்டது.

நிறுவனத்தின் 237 அலுவலர்களுக்கான தனிப்பட்ட வேதனங்களுக்கான செலவாக ரூபா.126.7 மில்லியன் காணப்பட்டது. 2012 ஆம் ஆண்டில் 228 ஊழியர்களுக்காக ரூபா. 107.2 மில்லியன் செலவு செய்யப்பட்டது.

இந்த நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் மேம்பட்ட செயற்பாட்டிற்கும் ஊழியர்களின் அர்ப்பணிப்பும் முகாமைத்துவத்தின் சிறப்பான வழிநடாத்தலுமே காரணமாகும்.

# நிதி நிலைமைக் கூற்று

| *31/12/20123 முடிவடைந்த ஆண்டிற்கானது* | 2013 ரூபா | 2013 ரூபா | 2012 ரூபா | 2012 ரூபா |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| **நடைமுறையல்லா சொத்துக்கள்** | | | | |
| சொத்து, இயந்திரம், உபகரணம் | 71,262,553.07 | | 67,510,842.20 | |
| சில்லறை கடன்பட்டோர் ( 1991 - 2010) | 8,574,602.50 | | 9,087,853.13 | |
| | | 79,837,155.57 | | 76,598,695.33 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| இருப்புக்கள் | 1,455,612.84 | | 1,261,495.03 | |
| மீளக்கிடைக்கும் கொடுப்பனவுகள் | 476,816.92 | | 830,984.42 | |
| நடைபெறும் வேலை | 17,666,169.91 | | 12,450,889.42 | |
| சில்லறை கடன்பட்டோர் (2011-2013) | 17,236,618.38 | | 17,676,718.64 | |
| சில்லறைக் கிடைப்பனவுகள்/மானியம் மற்றும் செயற்த்திட்டம் | 16,911,229.02 | | 18,911,229.02 | |
| வைப்புக்கள் | 61,237,860.18 | | 5,756,030.78 | |
| முற்பணங்கள் | 12,024,450.05 | | 5,834,485.73 | |
| முற்கொடுப்பனவுகள் | 1,902,509.57 | | 161,731.75 | |
| காசும் அதற்கு சமனானவையும் | 24,334,897.15 | 153,246,164.02 | 57,383,591.05 | 120,267,155.84 |
| மொத்தச் சொத்துக்கள் | | 233,083,319.59 | | **196,865,851.17** |
| **பொறுப்புக்கள்** | | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | |
| சில்லறைக் கடன் கொடுத்தோர் | 831,402.67 | | 1,373,802.67 | |
| அட்டுறு செலவுகள் | 13,757,737.77 | | 9,831,514.05 | |
| மீளச்செலுத்த வேண்டிய வைப்புக்கள் | 1,654,463.14 | | 2,278,098.15 | |
| **நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்** | | | | |
| நலன்புரி நிதி | 374,261.10 | | 374,261.10 | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 41,615,419.97 | | 36,709,313.75 | |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | 58,233,284.65 | | 50,566,989.72 |
| **மொத்த தேறிய சொத்து** | | 174,850,034.94 | | 146,298,861.45 |
| **தேறிய சொத்து/உரிமையாண்மை** | | | | |
| சுவீகரிக்கப்பட்ட சொத்துக்கள் | 2,264,497.95 | | 2,264,497.95 | |
| மறுமதிப்பீட்டு மிகை | 27,875,989.31 | | 27,875,989.31 | |
| அரச மானியம் | 131,125,638.15 | | 136,183,151.60 | |
| ஏனைய மானியம் | 50,082,517.64 | | 27,701,789.81 | |
| திரண்ட இலாபம்/நட்டம் | (36,498,608.11) | | (47,726,567.22) | |
| | | 174,850,034.94 | | 146,298,861.45 |
| **மொத்த தேறிய சொத்து/உரிமையாண்மை** | | 174,850,034.94 | | **146,298,861.45** |

# நிதிச் செயற்பாட்டுக் கூற்று

| *31/12/2013 முடிவடைந்த ஆண்டிற்கானது* | | 2013<br>ரூபா | 2012<br>ரூபா |
|---|---|---|---|
| தொழிற்பாட்டு வருமானம் * | | | |
| வருமானம் | இணைப்பு 17 | 222,219,196.39 | 185,256,279.83 |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | இணைப்பு 18 | 6,586,607.58 | 1,255,393.68 |
| ஆராய்ச்சி மானியம் | | 33,000,000.00 | 21,840,000.00 |
| | | 261,805,803.97 | 208,351,673.51 |
| தொழிற்பாட்டு **செலவுகள்•** | இணைப்பு 19 | | |
| ஊழியர் ஊதியங்கள் | | 126,771,000.21 | 107,270,718.36 |
| போக்குவரத்து மற்றும் ஊக்குவிப்பு | | 6,219,969.94 | 7,165,126.20 |
| பாவிக்கப்பட்ட இருப்புக்கள் மற்றும் நுகர்பொருட்கள் | | 15,639,563.98 | 12,395,115.55 |
| திருத்தம் மற்றும் பராமரிப்பு | | 8,233,088.18 | 7,088,100.03 |
| ஒப்பந்த சேவைகள் | | 55,456,024.51 | 41,435,342.46 |
| ஏனைய தொழிற்பாட்டு **செலவுகள்** | | 27,718,110.22 | 18,895,330.02 |
| **மொத்த** தொழிற்பாட்டு **செலவுகள்** | | 240,037,757.04 | 194,249,732.62 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலான மிகை/பற்றாக்குறை** | | 21,768,046.93 | 14,101,940.89 |
| காலம் கடந்த கணக்குகள் (Laps Account) | | | |
| நிதிச்செலவு | | (159,809.08) | (47,507.28) |
| தொழிற்பாட்டு **செலவுகள் அல்லாதவை** | இணைப்பு 20 | (10,380,278.74) | 7,407,231.10 |
| மொத்த தொழிற்பாடு அல்லாத வருமானம் (செலவு) | | (10,540,087.82) | 7,359,723.82 |
| **காலப்பகுதிக்கான தேறிய மிகை/பற்றாக்குறை** | | **11,227,959.11** | **21,461,664.71** |

# காசுப்பாய்ச்சல் கூற்று

| *31/12/2013 முடிவடைந்த ஆண்டிற்கானது* | ரூபா | ரூபா | ரூபா |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலான காசுப்பாய்ச்சல்** | | | |
| காலப்பகுதிக்கான **மிகை/பற்றாக்குறை** | **11,227,959.11** | | |
| ஆராய்ச்சி மானியம் | (33,000,000.00) | | |
| முன்னைய ஆண்டின் திருத்தம் | 3,656,607.45 | | |
| | (18,115,433.44) | | |
| **காசு சம்பந்தப்படாத நடவடிக்கைகளுக்கான திருத்தம்** | | | |
| பெறுமானத் தேய்வு | 1,364,418.81 | | |
| பணிக்கொடை ஏற்பாடு | 6,359,611.03 | | |
| பணிக்கொடை கொடுப்பனவு | (1,453,504.81) | | |
| முன்னைய ஆண்டின் திருத்தம் | (3,656,607.45) | | |
| **செயற்பாட்டு முதல் மாற்றத்திற்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்** | **(15,501,515.86)** | **(15,501,515.86)** | |
| **செயற்பாட்டு முதலில் மாற்றத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகள்** | | | |
| கடன்பட்டோர் அதிகரிப்பு (1991-2010) | 513,250.63 | | |
| இருப்பு அதிகரிப்பு | (194,117.81) | | |
| மீளஸ் செலுத்தவேண்டிய கொடுப்பனவு அதிகரிப்பு | 354,167.50 | | |
| நடைபெறும் வேலை அதிகரிப்பு | (5,215,280.49) | | |
| கடன்பட்டோர் அதிகரிப்பு (2011-2013) | 440,100.26 | | |
| சில்லறைக் கிடைப்பனவுகளின் குறைவு (மானியம் மற்றும் செயற்த்திட்டம்) | 2,000,000.00 | | |
| வைப்புக்களின் அதிகரிப்பு | | | |
| முற்பண அதிகரிப்பு | (55,481,829.40) | | |
| முற்கொடுப்பனவு குறைவு | (6,189,964.32) | | |
| சில்லறைக் கடன் கொடுத்தோர் குறைவு | (1,740,777.82) | | |
| அட்டுறு செலவுகளின் அதிகரிப்பு | (542,400.00) | | |
| மீளக்கிடைக்கும் வைப்புக்களின் அதிகரிப்பு | 3,926,223.72 | | |
| **செயற்பாட்டு முதலில் மாற்றத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகள்** | (623,635.01) | (62,754,262.74) | |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலான தேறிய காசுப்பாய்ச்சல் | | | **(78,255,778.60)** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலான காசுப்பாய்ச்சல்** | | | |
| தேறிய சொத்துக் கொள்வனவு | | (24,501,775.30) | **(24,501,775.30)** |
| **நிதி நடவடிக்கைகளிலான காசுப்பாய்ச்சல்** | | | |
| அரச மானியம் (ஆராய்ச்சி/கொள்முதல்) | | 51,000,000.00 | |
| | | 18,708,860.00 | **69,708,860.00** |
| | | | **(33,048,693.90)** |
| **காலப்பகுதியின் ஆரம்பத்தில் காணப்பட்ட காசும் அதற்கு சமனானவையும்** | | | |
| **காசும் அதற்கு சமனானவையும்** 31.12.2013 | | | **57,383,591.05** |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலான தேறிய காசுப்பாய்ச்சல் | | | **24,334,897.15** |

## கணக்குகள் தொடர்பான குறிப்புக்கள்

1. அடிப்படை கணக்கீட்டு எடுகோள்கள்

நிதிக்கூற்றுக்கள் அனைத்தும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக்கொள்கைகள் மற்றும் அடிப்படை கணக்கீட்டு கருதுகோள்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டன. (இவற்றில் ஏதும் மாற்றம் இருப்பின் கீழுள்ள குறிப்புக்களில் விபரிக்கப்படும்).

a) தொடர்ந்து போகும்எண்ணக்கரு
b) கணக்கீட்டுக் கொள்கைகள் மாற்றமின்றி கடைப்பிடிக்கப்பட்டுள்ளன
c) வருமானம் மற்றும் செலவு என்பன உரிய ஆண்டுகளில் கணக்கெடுக்கப்பட்டுள்ளன

2. **இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கப்பாடு (Sri Lanka Public Sector Accounting Standards -SLPSAS).**

பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றுநிரூபம் PED/POL/CIR/2013-3 இற்கமைய, 31 மார்கழி 2013 முடிவடைந்த ஆண்டிற்கான கணக்கீட்டு நிதிக்கூற்றுக்கள் SLPSAS 2-6 இற்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது. 2014 இற்கான நிதிக்கூற்றுக்கள் முழுமையாக இந்த நியமத்திற்கு இணங்க தயாரிக்கப்படும்.

3. **பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்**

**(1)** பெறுமான தேய்வு கொள்கைகள்

a. 2009 இலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட முதல் வருடத்தில் பெறுமானத்தேய்வு முழுமையாக அளிக்கப்படும். அத்துடன் அகற்றப்படும் ஆண்டில் பெறுமானத்தேய்வு அளிக்கப்படமாட்டாது.

b. நிலையான சொத்துக்களுக்கு நேர்கோட்டு முறையில் பல்வேறு வீதங்களில் பெறுமானத்தேய்வு அளிக்கப்பட்டது:

| | % |
|---|---|
| கட்டிடங்கள் | 2.5 |
| இயந்திரம் மற்றும் ஆய்வுகூட உபகரணம் | 20.0 |
| தளபாடம் மற்றும் பொருத்துகைகள் | 10.0 |
| வாகனங்கள் | 20.0 |
| பொதுவான அலுவலக உபகரணம் | 20.0 |
| வரைபட அலுவலக உபகரணம் | 10.0 |
| கருவிகள் | 50.0 |
| நூலக புத்தகங்கள் | 5.0 |
| தீயணைக்கும் கருவி | 10.0 |

c. மானியமாக கிடைத்த சொத்துக்களின் பெறுமானத்தேய்வு இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கமைய மானியத்திலிருந்து கழிக்கப்பட்டுள்ளது.

**(2)** இறுதி இருப்பு மதிப்பீடு

பயன்படுத்தப்பட்ட பொருட்கள் முதல் வந்தது முதல் வெளியே எனும் அடிப்படையில் பயன்படுத்தப்பட்டது. மேலும் இறுதியிருப்பு இறுதியான கொள்வனவு விலையில் மதிக்கப்பட்டது.

**(3)** பணிக்கொடைக் கொடுப்பனவு

பணிக்கொடைக் கொடுப்பனவானது பணிக்கொடை சட்டத்தின் படி கணிக்கப்பட்டது.

**(4)** கடன்பட்டோர் ஏற்பாடு

சந்தேகத்திற்கிடமான கடன்பட்டோர் தொடர்பில் கீழ்வரும் முறையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன;

a) 2-10 ஆண்டு வரையான கடன்பட்டோர் மீது 1% ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது.

b) 10 ஆண்டுகளுக்கு மேலான கடன்பட்டோர் மீது 25% ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது.

**4. அரச மானியம்**

| | 2013 | 2012 |
|---|---|---|
| | ரூபா. | ரூபா. |

கொள்வனவு மானியம் 18,000,000

21,840,000

4 வாகனங்கள் கொள்வனவிற்கான மானியம் -

11,000,000

18,000,000

32,840,000

**5.** இந்த ஆண்டிற்கான அறவிட முடியாக்கடன்

மீள அறவிடமுடியாத தனியார் துறை சார்ந்த சில்லறை கடன்பட்டோரிடமிருந்து வரவேண்டிய தொகையான ரூபா. 1, 253,980.87 IMC பத்திர இல. 8-12/2013 அடிப்படையில் அறவிடமுடியாக்கடனாக பதியப்பட்டது.


**6.** தொழில்நுட்ப கூட்டிணைவின் கீழ் உடனடி மண்சரிவு எதிர்வுகூறல் மற்றும் முன்னெச்சரிக்கை முறைமையினை மேம்படுத்த சுயமாக இயங்கக்கூடிய மழைமானி வலையமைப்புக்களை பொருத்த ரூபா. 18,708,860 மானியமாக கிடைத்தது. இந்த நிதியுதவியானது UNDPஇன் - DRM நிகழ்ச்சித்திட்டம் ஊடாக USAID நிறுவனத்தால் மானியமாக வழங்கப்பட்டது.


**7.** NBROஇன் நிதியிலிருந்து ரூபா. 13,957,790.36 பேராதெனிய மற்றும் பதியப்பளல்ல மண்சரிவு தணிப்பு நடவடிக்கைகளுக்காக திறைசேரியிடமிருந்து 2012இற்கென கிடைக்கவேண்டிய பணம் கிடைக்காமையால் பயன்படுத்தப்பட்டது.

# மனித வளம்/இயலுமை விருத்தி

NBROவின் தொலைநோக்கு மற்றும் பணிக்கூற்று என்பன அமைச்சின் DRR தேவைக்கேற்ப அதன் இயலுமையை விருத்தி செய்யும் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இதனையடிப்படையாகக் கொண்டு NBRO அதன் ஊழியர்களின் இயலுமையை அதிகரிக்குமுகமாகவும் அதன் செயற்பாடுகளை விஸ்தரிக்கவும் அதனை ஒரு சட்டரீதியாக கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமாக மாற்றும் முயற்சியில் இறங்கியுள்ளது. தொழிலாளர் புரள்வு NBROவை பொறுத்தவரையில் மிகமுக்கிய உள்ளார்ந்த பிரச்சனையாகக் காணப்படுகின்றது. தற்போது நிறுவனத்தின் அதிகரித்த பொறுப்புக்களினால் மனித வளம் மற்றும் அடிப்படை தேவைகள் என்பன முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டிய விடயங்களாக மாறியுள்ளது.

முக்கிய காலியான பதவிகளுக்கு ஆட்சேர்ப்பானது நிறைவடைந்துள்ளது. தற்போதுவரை 26 ஊழியர்கள் ஏழு பிரிவுகளின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். 31 மார்கழி 2013 வரையான காலப்பகுதியில் நிறுவனத்தில் 45 பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன. ஊழியர் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டமொன்று 2013 இல் ஆரம்பிக்கப்பட்டது. உள்ளூர் மற்றும் சர்வதேச பயிற்சி வாய்ப்புக்கள் ஊழியர்களின் அனுபவம் மற்றும் அறிவை மேம்படுத்தும் பொருட்டு ஏற்படுத்தி கொடுக்கப்பட்டது.




## ஊழியர் சேர்ப்பு/ஓய்வு/பதவி விலகல்- 2013

| இல | சம்பள இல | ஊழியர் வகை | ஆட்சேர்ப்பு | பதவி விலகல் | ஓய்வு |
|---|---|---|---|---|---|
| 1 | HM 1- 3 | சிரேஷ்ட முகாமையாளர் (CEO) | 01 | -- | - |
| 2 | HM 1-1 | **சிரேஷ்ட முகாமையாளர்** | 05 | - | - |
| 3 | MM 1-1 | இடைநிலை முகாமை | 02 | 01 | - |
| 4 | AR 2 | சிரேஷ்ட கல்வி சார்/விஞ்ஞானி | - | 01 | - |
| 5 | AR 1 | கல்வி சார்/விஞ்ஞானி | 13 | 06 | - |
| 6 | MA 2-2 | முகாமைத்துவ உதவியாளர் (தொ.நு) | 01 | - | - |
| 7 | MA 1-2 | முகாமைத்துவ உதவியாளர்t (தொ.நு அல்) | 02 | 03 | - |
| 8 | PL 3 | அடிப்படை தகைமை | 03 | 03 | - |
| 9 | PL 1 | அடிப்படை தகைமை இன்மை | - | 02 | 01 |
| | **மொத்தம்** | | **26** | **16** | **01** |

மொத்த பதவிநிலைகள் 237

## உள்ளூர் பயிற்சிகள் - 2013

| இல | சம்பள இல | ஊழியர் வகை | உள்ளூரில் பயிற்றப்பட்ட ஊழியர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | AR 1/2 | கல்விசார்/ஆராய்ச்சி | 24 |
| 2 | MM 1-1 | இடைநிலை முகாமை | - |
| 3 | JM1-1 | கனிஷ்ட முகாமை | 01 |
| 4 | MA 2-2 | முகாமைத்துவ உதவியாளர்t (தொ.நு) | 06 |
| 5 | MA 1-2 | முகாமைத்துவ உதவியாளர்t (தொ.நு அல்) | 05 |
| 6 | PL | அடிப்படை | 01 |
| | மொத்தம் | | 37 |

## வெளிநாட்டு பயிற்சிகள்/செயலமர்வுகளில் பங்கேற்பு-2013

| இல | ஊழியர் வகை | பயிற்றப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | செயலமர்வுகளில் பங்கேற்ற ஊழியரின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | கல்விசார்/ஆராய்ச்சி (விஞ்ஞானி) | 12 | 05 |

# பங்குபற்றிய தேசிய நிகழ்வுகள்

### தயட்ட கிருள அபிவிருத்திக் கண்காட்சி-2013, அம்பாறை

தயட்ட கிருள அபிவிருத்திக் கண்காட்சி 2013 ஆனது அம்பாறை மாவட்டத்தின் ஹாடி தொழில்நுட்ப கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இதன் பிரதான நோக்கம் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளை மக்களுக்கு தெரியப்படுத்துவதாகும்.
NBROவும் இந்த கண்காட்சியில் தனக்குரிய கண்காட்சி கூடத்தினை ஸ்தாபித்திருந்தது. அக்கூடத்தில் நிறுவன செயற்பாடுகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் அதன் ஊழியர்கள் மக்களுக்கு மண்சரிவு மற்றும் அதனுடன் இணைந்த அனர்த்தங்கள் தொடர்பாகவும் அறிவுறுத்தினர்.

### NBROஇன் வருடாந்த ஆய்வரங்கு

2013 ஆம் ஆண்டிற்கான NBROஇன் வருடாந்த ஆய்வரங்கு 19 மார்கழி 2013 அன்று அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கேட்போர் கூடத்தில் "அனர்த்த இசைவாக்கத்தில் பொருளியல்" எனும் தொனிப்பொருளில் இடம்பெற்றது. மேலும் "கட்டிட இசைவாக்கத்தில் புவித்தொழில்நுட்பத்தின் பங்கு", அனர்த்த இடர்க்குறைப்பில் புவி விஞ்ஞானத்தின் பங்கு" மற்றும் புவி திட்டமிடல் மற்றும் இசைவாக்க சூழல்" போன்ற உபதலைப்புகளில் விசேட ஆய்வரங்குகள் இடம்பெற்றன.

ஆரம்ப நிகழ்வின் போது பல்வேறு துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய பொதுமன்றம் ஒன்று இடம்பெற்றது. இந்த மன்றத்தில் (i) திரு. வசந்த விஜேகுலசூரிய (புவித்தொழில்நுட்ப பொறியியலாளர், Coffey International), (ii) பொறியியலாளர்.திரு. ஷிரோமல் பெர்னாண்டோ (பிரதம நிறைவேற்று அதிகாரி, ivil and Structural Engineering

Consultants Pvt. Ltd மற்றும் DMCஇன் தொழில்நுட்ப ஆலோசனை குழு உறுப்பினர்), (iii) பேராசிரியர். வில்லி மெண்டிஸ் (கட்டடக் கலைப்பீடம், மொரட்டுவ பல்கலைக்கழகம்) ஆகியோர் பங்கேற்றார்கள். ஒவ்வொரு நிபுணரும் ஏற்கனவே கூறிய மூன்று உபதலைப்புக்களின் அடிப்படையில் தெரிவு செயப்பட்டனர். இந்த ஆய்வரங்கினை பிரபல எழுத்தாளரும் தொலைக்காட்சி அறிவிப்பாளருமான திரு. நாலக குணவர்தன தொகுத்து வழங்கினார்.

NBRO 2013 ஆய்வரங்கிற்காக அதிகமான ஆய்வுக்கட்டுரைகளை NBROஇன் உள்ளக ஆய்வாளர்களிடமிருந்தும் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு வெளியக ஆய்வாளர்களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. இவற்றில் 21 ஆய்வுக்கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆய்வரங்கின் நூலில் உள்ளடக்கப்பட்டன. இந்த ஆய்வுக்கட்டுரைகளில் முக்கியமானவை குறித்த ஆய்வாளர்களினால் ஆய்வரங்கின் போது முன்னிலைப்படுத்தப்பட்டன.

## இயலுமை வளர்ச்சி

NBRO இலங்கையின் மண்சரிவு அனர்த்த முகாமைத்துவத்தில் முக்கிய பங்காற்றும் நிறுவனமாகும். அபிவிருத்தியின் போக்கும் அனர்த்தங்களும் அதிகரித்து வருகின்ற நிலையில் NBRO மிகவும் சிக்கலானதும் சவால்மிகுந்ததுமான சூழ்நிலைகளுக்கு முகம்கொடுக்கக் கூடிய வகையில் அதன் இயலுமையை அதிகரிக்க வேண்டியுள்ளது.

2013 இல் NBROவிற்கு அரசினால் ஆய்வுகூட மற்றும் களச்செயற்பாடுகளுக்கான உபகரணத்தை கொள்வனவு செய்ய கொடுக்கப்பட்ட ரூபா.18 மில்லியனைக் கொண்டு அதன் உபகரண இயலுமை சற்று பலமாக்கப்பட்டது.

## இந்த ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள்;

a) சீமெந்து பரிசோதனை கருவி (Le Chatelier's Apparatus)
b) கட்டிட வெடிப்புக்களை ஆராயும் கருவி (Ultrasonic Pulse Velocity Tester)
c) அப்ராசியன் இயந்திரம் (Abrasion Machine)
d) ஈரமானி (Hygrometer)
e) ஜிபிஎஸ் (Hand Held GPS)
f) TKN Analysis (Distillation)
g) வெப்ப இரட்டைமானி (Thermocouple)
h) Pitot Tube/Bottle Cooler
i) அதி அழுத்த கொதி அடுப்பு (Top Loading Autoclave)
j) Thermostatic control water Bath
k) வளி தர மானி (Air Quality Monitoring Equipment)
l) NMCC Diamond Core Bit
m) Hand Van Shear Vane Tester

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல.
My No. டீசு2/ஜீ/என்பீஆர்ஓ/1/13/19

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 2014 திசெம்பர் 10

தலைவர்

தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனம்

**தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை 2014 ஒக்டோபர் 31 ஆந் திகதி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும்

பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்காக நானாவித நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளால் நிறுவனத்திற்கு 1985 முதல் 2005 வரையான காலப்பகுதியின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட

மானியங்களான ரூபா 25,493,260 அபிவிருத்தி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்த போதிலும் சீராக்கங்கள் இன்றி மானியங்களின் கீழ் தொடர்ந்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கெரடிஅல்ல மண ்சரிவை குறைக்கும் செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்தப்பட வேண்டிய ரூபா 6,167,402 தொகையான செலவினங்களுக்கான நிதிஏற்பாடு நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினமாக நிதிச் செயலாற்றல் அறிக்கையில் ரூபா 11,641,621 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இதற்கு உரித்தான விபரமான குறிப்புகளில் அச் செலவினம் ரூபா 10,735,000 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மண ்சரிவு ஆராய்ச்சி மற்றும் இடர் முகாமைத ்துவப ் பிரிவால் 2012 ஆம் ஆண்டின் போது 09 வெளித்தரப்பினருக்கு மேற்கொள்ளப்பட்ட சேவைகளுக்காக ரூபா 7,024,787 தொகை அறவிடப்படுவதற்கு இரண்டு ஆண்டுகள் கடந்திருந்ததுடன் அப் பெறுமதி கடன்பட்டோரின் கீழ் காண்பிக்கப்படுவதற்குப் பதிலாக நடைமுறை வேலையின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 2014 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 18,708,860 பெறுமதியான மழைநீர் அளவீட்டு உபகரணம் 2013 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட சொத்தாகக் கருதப்பட்டு இதற்காக ரூபா 29,000 தொகை பெறுமானத்தேய்வு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

மண்சரிவு இடர் மதிப்பீட்டு அறிக்கை வழங்கப்படுவது தொடர்பாக 15 பிரதேச சபைகளால் மீளாய்வாண்டிற்காக ரூபா 846,360 தொகையும் முன்னைய ஆண்டிற்காக 04 பிரதேச சபைகளிடமிருந்து பெறவேண்டிய ரூபா 141,933 தொகையான வருமானமும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் கடன்பட்டோர் மீதியில் 16 சதவீதம் பிரதிபலிக்கப்பட்ட ரூபா 4,602,121 தொகை 5 முதல் 17 ஆண்டுகள் வரையான காலமாகக் காணப்பட்ட போதிலும் அம் மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவனத்தால் 2010 ஆம் ஆண்டின் போது கொள்வனவுகளுக்காகவும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காகவும் திறைசேரியில் இருந்து கிடைக்கப்பெற்ற பணத்தைப் பார்க்கிலும் கூடியளவு செலவினங்கள் மேற்கொள்ளப்பட்ட ரூபா 10,500,000 தொகை பெறவேண்டிய பணமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

புவியியல் தொழில்நுட்ப பொறியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு, செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு மற்றும் மண்சரிவு ஆராய்ச்சி மற்றும் இடர் முகாமைத்துவப் பிரிவின் கீழ் நடைமுறைவேலையாகக் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 17,666,169 தொகையான மீதி தொடர்பான முன்னேற்ற அறிக்கை, சான்றுறுதிப்படுத்தப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் ஆகிய சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XV ஆம் | வெளிநாட்டுப் பயணத்தின் போது ஓர் உத்தியோகத்தருக்கு 05 ஆண்டு காலப்பகுதியின் போது வெப்ப உடைக் |

| | |
|---|---|
| அத்தியாயத்தின் 9.4 ஆம் பந்தி | கொடுப்பனவு ஒரு முறைக்கு மேல் வழங்கப்படலாகாத போதிலும் ஒரு உத்தியோகத்தருக்கு 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளாகிய 02 ஆண்டுகளின் போதும் முறையே ரூபா 15,173 தொகையும் ரூபா 15,176 தொகையுமாக வெப்ப உடைக் கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்

---

| | |
|---|---|
| (i) நிதிப்பிரமாணம் 371(2) | முற்பணமாக வழங்கப்பட்டிருந்த பணம் செயற்பாடு முடிவுற்றதை உடனடுத்து தீர்க்கப்பட வேண்டும். எவ்வாறெனினும், அத் தேவைப்பாடுகளுக்கு இணங்கியிராத 57 சந்தப்பங்களின் போது ரூபா 1,589,263 கூட்டுத்தொகையான முற்பணத் தொகை 02 மாதங்கள் முதல் 05 மாதங்கள் வரையான காலப்பகுதியாக தாமதமாகத் தீர்க்கப்பட்டிருந்தன. |
| (ii) நிதிப்பிரமாணம் 371(5) | முற்பணமாக வழங்கப்பட்டிருந்த சகல பணமும் நிதியாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் அவ்வாறு தீர்க்கப்படாத முற்பணத்தொகையின் கூட்டுத்தொகை ரூபா 455,277 ஆகக் காணப்பட்டது. |
| (iii) நிதிப்பிரமாணம் 757(1)(அ) மற்றும் (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் களஞ்சியத்தில் பொருட் பதிவேடு சமப்படுத்தப்பட்டு அவை சரியென களஞ்சிய உத்தியோகத்தரால் சான்றிதழ் ஒன்று வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (iv) | நிதிப்பிரமாணம் 1647 | நிறுவனத்திடம் உள்ள 18 வாகனங்கள் தொடர்பாக முழுமையான மெய்மையாய்வு வருடாந்தம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1990 ஒக்டோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | ஒவ்வொரு 06 மாதங்களுக்கு ஒரு தடவை நிறுவனத்தில் உள்ள வாகனங்களின் எரிபொருட் பயன்பாடு பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தில் உள்ள வாகனம் தொடர்பான எரிபொருள் பயன்பாடு மீளாய்வாண்டின் போது ஒரு தடவையேனும் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்காக செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான விளைவுகள் ரூபா 11,227,959 மிகையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 21,461,664 ஆகக் காணப்பட்டது. இதன் படி நிதி விளைவுகளில் ரூபா 10,233,705 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது நிறுவனத்தின் பல்வேறு பகுதிகளின் வருமானம் ரூபா 36,962,917 ஆல் அதிகரித்திருந்ததுடன் ஆராய்ச்சி மானியமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட தொகை ரூபா 11,160,000 தொகையான அதிகரித்திருந்த போதிலும் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 63,637,836 ஆல் அதிகரித்திருந்தமை இவ்வீழ்ச்சிக்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

அனர்த்த இடரைக் குறைக்கும் பாதுகாப்பினை அடிப்படையாயக் கொண்ட சூழலுக்காக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்தி தொழில்நுட்பப் பங்களிப்பை வழங்குவது நிறுவனத்தின் பிரதான

செயற்பணியானதுடன் நடைமுறையில் மண்சரிவு அபாயமுள்ள வலயத்தை வரைபடத்தில் குறித்து மண்சரிவைக் குறைக்கும் செயற்திட்டத்தை மேற்கொள்வது முதன்மையான செயற்பாடாக இருந்தது. இச் செயற்பணியும் செயற்பாட்டையும் மேற்கொள்கையில் மீளாய்வாண்டின் இறுதியில் நிறுவனத்தால் எய்தப்பட்ட செயலாற்றலின் ஒட்டுமொத்த தகவல்கள் பின்வருமாறாகும்.

(அ) மண்சரிவு ஆபத்துள்ள வலயத்தை வரைபடத்தில் குறிக்கும் செயற்திட்டம்

---

நிறுவனத்தால் மண்சரிவு அபாயங்களை இனங்காணல், எல்லைகளை நிர்ணயித்தல் மற்றும் இது தொடர்பான இடர் 1:10,000 மற்றும் 1:50,000 அளவுத்திட்டத்திற்கு வரைபடத்தில் குறித்துக் காண்பிப்பதன் மூலம் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுவதுடன் மீளாய்வாண்டின் போது 11 மாவட்டங்களில் 32,972 சதுர மீட்டர்கள் வரைவதற்கிருந்தது.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இடர் வலய வரைபடம் குறித்தல் செயற்திட்டத்தின் கீழ் 10 மாவட்டங்களில் 6,720 சதுர மீட்டர்களில் 1:10,000 அளவிலான 168 வரைபடம் குறிப்புகள் மேற்கொள்ளப்பட இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் 2,320 சதுர கிலோமீட்டர்களுக்கான 58 வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்படுவதற்கு முடியாதிருந்தன.

(ii) வரைபடம் குறித்தல் நடவடிக்கைகளுக்காகத் தயாரிக்கப்பட்டிருந்த பௌதீக திட்டங்களில் உரிய வரைபு குறித்து பூர்த்தியாக்கப்பட வேண்டிய காலம் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்ட 51 வரைபடங்கள் அவதானிக்கப்பட்டன. எவ்வாறெனினும், உரிய வரைபடக் குறிப்பு நடவடிக்கைகளின் நிதி ரீதியான முன்னேற்றம் பாதீட்டு மதிப்பீட்டுடன் இணங்கும் வகையில் ஆண்டின் இறுதியில் மீள சீராக்கப்படுவதால் இந் நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றமும் எஞ்சிய ஏற்பாடு தொடர்பான விபரமும் கணக்காய்விற்குப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) மண் சரிவு இடர் மதிப்பீட்டு அறிக்கைகள் வழங்கல்

நிறுவனத்தால் கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவலின் படி, மண்சரிவு அபாயத்துடன் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் ஏதேனும் கட்டிட அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் கட்டிடம் நிர்மாணிக்கும் நபர்களால் மண்சரிவு அபாய மதிப்பீட்டு அறிக்கை உரிய உள்ளூராட்சி நிறுவனத்தினூடாக பெற்றுக்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இச் செயற்பாட்டிற்காக நிறுவனத்தால் 10 மாவட்டங்களில் அலுவலகங்கள் அமைக்கப்பட்டிருந்தன. மண்சரிவு அபாய மதிப்பீட்டு அறிக்கை வழங்கப்படுவது தொடர்பாக மண்சரிவு மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு மற்றும் மாவட்ட அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவலின் படி, இவ் அறிக்கை வழங்கப்படுவதன் மூலம் மீளாய்வாண்டின் போது ரூபா 30,475,433 தொகையான ஓர் வருமானம் உழைக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மண்சரிவு அபாயம் நிலவும் பிரதேசத்திற்கு அண்மித்த கிராமங்களில் மேற்கொள்ளப்படும் நிர்மாணிப்புகள் தொடர்பாக உரிய சான்றுறுதியைப் பெற்றுக்கொள்ளும் தேவைப்பாடு தொடர்பாக மக்கள் தெளிவூட்டப்பட்டிராமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் இவ் விடயங்கள் தொடர்பாக கிராம சேவகர்கள் பொது மக்களுடன் முறையான ஒருங்கிணைப்பைக் கொண்டிருக்கவில்லை. இதன் படி சொந்தமாக மேற்கொள்ளப்படும் நிர்மாணிப்புகள் தொடர்பாக இத்தகைய சான்றுறுதியைப் பெற்றுக்கொள்ளப்பட்டிராமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(ii) மண்சரிவு அபாய மதிப்பீட்டு அறிக்கைகள் வழங்கப்படுகையில் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மீளக் கையளிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்குள்ள வாய்ப்பைத் தவிர்க்கும் வகையில் உரிய மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் மற்றும் நிராகரிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பான தரவுக் களஞ்சியம்

ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. மேலும், நுவரெலியா மாவட்டத்தின் பதியபெலெல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவின் பதியபெலெல்ல சிறிய அளவிலான மின்சக்தி செயற்திட்டத்தின் நிர்மாணிப்பிற்காக நிறுவனத்தால் வழங்கப்பட்ட யோக்கியதை தொடர்பான அடிப்படை புவியியல் மெய்மையாய்வு அறிக்கையின் அவதானிப்பின் படி இப் புவியின் மண்சரிவு அபாய நிலை நிலவியமையால் பரிந்துரைக்கப்பட்ட நிர்மாணிப்பிற்காக அந் நிலம் ஏற்றதல்ல என்ற உறுதிப்பாடு இருந்த போதிலும் உரிய தரப்பினரால் அவ் அறிக்கை கருத்திற்கொள்ளப்படாது ரூபா 2,087,960 தொகை செலவில் நிர்மாணிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. நிறுவனத்தால் விநியோகிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு சட்ட அதிகாரம் ஒன்று அமைப்பிற்கு இல்லாததுடன் இது தொடர்பாக உரிய உள்ளூராட்சி நிறுவனம் செயற்பட வேண்டும் எனவும் இது தொடர்பாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் விளக்கமளித்திருந்தார்.

(iii) உரிய சான்றுறுதியைப் வழங்குவதற்காக பிரதேச சபையிகளிலிருந்து ரூபா 27,466,943 தொகை அறவிட்டிருந்த போதிலும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 948,393 தொகை நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கப்படாதிருந்தமையால் பிரதேச சபைகளிலிருந்து அறவிடப்பட்ட பணம் நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கும் முறைமையை முறையாகப் பேணியிருக்கவில்லை.

(இ) கொரடிஎல்ல மண்சரிவைக் குறைக்கும் செயற்திட்டம்

---

இச் செயற்திட்டத்தின் கீழ் உரிய பிரதேசத்தின் மண்ணரிப்புத் தொடர்பான எச்சரிக்கையை பாரியளவில் எதிர்நோக்கிய 50 வீடுகள் அவ் ஆபத்திலிருந்து விடுபடுவது, சிறுபகுதிகள் உடைந்து வருவது வேறு பிரதேசத்திற்கு திருப்புவதற்காக மண் நிரப்பி கட்டொன்றை நிர்மாணித்து பிரதான வீதிகள் சிலவற்றை மீள அமைத்தல் 2012 முதல் 2016 வரையான காலப்பகுதியின் போது செயற்படுத்துவதற்கு இருந்தது. இச் செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 93,011,363

ஆகக் காணப்பட்டது. இதில் முன்னைய ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட வேண்டிய கிரயத்தின் பெறுமதி ரூபா 12,750,000 தொகையான வேலைகள் அவ் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிராததுடன் அவ் வேலைப்பகுதிகளின் கிரயம் ரூபா 11,550,000 தொகையான வேலைப் பகுதிகள் 2013 செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பதவியணி நிர்வாகம்

நிறுவனத்தின் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு நடைமுறை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் 2012 மார்ச் 02 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெற்றிட ஊழியர்களின் எண்ணிக்கை 57 ஆகும். இவ்வாறே நிரந்தர பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த ஊழியர்களின் எண்ணிக்கை 41 ஆகக் காணப்பட்டது. நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு நேரடியாகத் தொடர்புபடும் 27 முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் இதற்காக உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்பு இரண்டு வருட காலத்திற்குத் தாமதமாக்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தை ஸ்தாபித்தல்

தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனம், பொறியியல் கூட்டுத்தாபனம் மற்றும் கட்டிடத் திணைக்களத்தின் மண் பரிசோதனை ஆய்வுகூடம் எனும் நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக வேறான ஓர் நிறுவனமாக 1993 செப்தெம்பர் 29 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் இந் நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. பாராளுமன்ற அதிகாரச்சட்டத்தின் கீழ் முறையான அரச நிறுவனம் ஒன்றாக நிறுவனம் கூட்டமைக்கப்பட்டிராத காரணத்தால் ஆபத்தான பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணிப்புக்களுக்கு எதிராக நிறுவனத்திற்கு எடுக்கக் கூடிய சட்ட நடவடிக்கைகள் வரையறுக்கப்பட்டமை தொடர்பாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 5.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

நிறுவனத்தின், வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் எதிர்பார்த்த பௌதீக செயற்பாட்டைக் கருத்திற்கொள்ளாது அந் நிதி இலக்கை எய்திக்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக இடர் வலயத்தை வரைபடத்தில் குறித்தல், மண்சரிவைக் குறைத்தலுக்காக மேற்கொள்ளப்படும் நிர்மாணிப்புகள் தொடர்பான பௌதீகச் செயலாற்றலை மதிப்பிடுவதற்கு கணக்காய்விற்கு முடியாதிருந்தது.

## 5.3 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஒரு உத்தியோகத்தரைக் கொண்டிருந்ததுடன் நிறுவனத்தின் தலைமைப் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக கொடுப்பனவுகள் மற்றும் பௌதீகச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் முன்னேற்றம் தொடர்பான நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டிற்கான நிதி இலக்கை தயாரிக்கையில் இதற்காக போதிய கவனம் எடுக்கப்பட்டிராமையும் பாதிடப்பட்ட வருமானமும் செலவினமும் இலக்குகள் எய்தப்படுவதற்கு பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்காக போதிய கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை பாதீடிடப்பட்ட எண்ணிக்கைக்கும் உள்ளபடியான எண்ணிக்கைக்கும் இடையே நிலவிய பாரிய வேறுபாட்டின் போது தெளிவாகியது. இதன் பிரகாரம், பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு சாதனமாக பயன்படுத்தப்பட்டிராமை மேலும் அவதானிக்கப்பட்டது.

## 5.5 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புகள் எய்தப்படல்

நிறுவனத்தால் இடர் அபாயத்தை குறைப்பதற்காக நாட்டின் மலைநாடுகளின் மண்சரிவுகள் தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இதனை ஒத்த இடர் கொண்ட பகுதிகளில் வரைபை வரைந்து அப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும்

நிர்மாணிப்புகள் தொடர்பான மண்சரிவு இடர் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கைகளை வழங்குதல் போன்ற பாரிய பொறுப்புகள் ஏற்கப்படுகின்றன.

மண்சரிவு இடர் வலயங்களை வரைவாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் மண்சரிவு இடருடனான பகுதிகளை இனங்கண்டு பல்வேறு நிறுவனங்களின் மூலம் தேசிய மற்றும் பிரதேச மட்டத்தில் கொள்கை வகுத்தல், அபிவிருத்தி திட்டம் தயாரித்தல், முழுமையான மண்சரிவு அபாயங்களை அறிவித்தல், மண்சரிவு அபாயத்துடன் கூடிய பிரதேசங்களில் கட்டிடங்களுக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு பயன்படுத்தப்படுகின்றன.

மேற்குறித்த விடயங்களுக்கு மேலாக 2013 யூன் 30 வரையிலும் ரூபா 2,677,773 தொகை செலவிட்டு மண்சரிவு, சுனாமி மற்றும் வெள்ளம் போன்ற இடர்களுக்கு ஈடுகொடுக்கும் 06 மாதிரி வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. நிறுவனத்தால் இடர்களுக்கு ஈடுகொடுப்பது தொடர்பான ஆலோசனைகள் அடங்கிய கைநூல் வழங்கப்பட்டிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டது. பின்வரும் துறைகள் தொடர்பாக முகாமைத்துவத்தின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) கடன்பட்டோர் கட்டுப்பாடு
(இ) பதவியணி நிர்வாகம்
(ஈ) செயற்திட்ட முகாமைத்துவம்
(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு

ஒப்பம்: டபிள்யு.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)
*Ms/v*

ආපදා කළමනාකරණ අමාත්‍යාංශය
அனர்த்த முகாமைத்துவ அமைச்சு
Ministry of Disaster Management

දුරකතන / தொலைபேசி / Telephone 011-2588946, 011-2503431, 011-2500354
අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் நாயகம் / Director General 011-2505149

ජාතික ගොඩනැගිලි පර්යේෂණ සංවිධානය
தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்
NATIONAL BUILDING RESEARCH ORGANISATION

ෆැක්ස් / தொலைநகல் / Fax 011-2502611 වෙබ්අඩවිය / இணையத்தளம் / Website www.nbro.gov.lk ඊමේල් / மின்னஞ்சல் / E-mail nbro@sltnet.lk

99/1, ජාවත්ත පාර, කොළඹ 5.
99/1, ஜாவத்தை வீதி, கொழும்பு 5.
99/1, Jawatta Road, Colombo 5.

Our Ref} NBRO/AD/2013/230 Your Ref} Date} 2014.05.14

கணக்காய்வாளர் நாயகம்
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
இல 306/72, பொல்துவ வீதி
பத்தரமுல்ல

38 ஆம் இலக்க இலங்கை நிதிச்சட்டம் 1971 இன் பிரிவு 14(2) (சீ) இன் படி தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் 31 மார்கழி 2013 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் தொடர்பில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

கணக்காய்வாளர் நாயகத்தின் 10 மார்கழி 2014 அன்று திகதியிடப்பட்ட அறிக்கை இல DE2/G/NBRO/1/13/19 இற்கு அமைவாக கீழ்வரும் விளக்கங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

2.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பிலான கருத்துக்கள்

2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(a) 1985-2005 வரை கிடைத்த மானியங்களில் ரூபா. 25,493,260/= ஆனது இறுதிக் கணக்குகளில் வருடாந்தம் ஏனைய மானியங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது. எனவே இதனை தொடர்ச்சியாக ஏனைய மானியங்களின் கீழ் காட்டும் தேவைப்பாடு இல்லாததால் திரட்டு நிதியத்துடன் சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(b) 2013 இல் கரந்தியேல செயற்த்திட்டம் தொடர்பாக மண்சரிவு ஆராய்ச்சி மற்றும் இடர் முகாமைத்துவ பிரிவினால் தயாரிக்கப்பட்ட மாதாந்த வளர்ச்சிப் போக்கு அறிக்கையின் படி 2013 இற்கான நடைபெறும் வேலை ரூபா. 23.70 மில்லியன். எனினும் இந்த தொகை செலுத்தப்பட்டதாக கணக்காய்வு அறிக்கைகளில் காட்டப்பட்ட போதும் 2013இல் செலுத்தப்படவில்லை. கரந்தியெல செயற்த்திட்டத்தின் நிதிநிலை ரூபா. 29.96 மில்லியன் என மண்சரிவு ஆராய்ச்சி மற்றும் இடர் முகாமைத்துவ பிரிவினால் காட்டப்பட்டுள்ளது. கணக்காய்வு அறிக்கையின் 2 (a) பிரிவில் இந்த தொகை மொத்த செலவாக காட்டப்பட்டுள்ள அதேவேளை செலுத்தப்படவேண்டிய தொகை ரூபா. 6,167,402 வித்தியாசமாக காட்டிய தொகை மார்கழி மற்றும் கார்த்திகை மாதங்களுக்கான நடைமுறை வேலை (ரூபா. 29.96 - 23.79) ஆகும். 2013 இல் கரந்தியெல செயற்த்திட்டத்திற்கென மேற்கொண்ட நேரடி செலவு ரூபா. 14 மில்லியனாகும். அத்துடன் மேந்தலை செலவுகளையும் சேர்த்து 2013இல் நிறுவனத்தால் செய்யப்பட்ட மொத்த செலவு ரூபா. 21.63 மில்லியனாகும்.

மண்சரிவு ஆராய்ச்சி மற்றும் இடர் முகாமைத்துவ பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட செயற்த்திட்ட வளர்ச்சிப்போக்கு அறிக்கையில் ரூபா. 29.96 மில்லியனின் மீதமான ( ரூபா. 29.96 - 21.63 = 8.33மில்) தொகை 2014இன் முதல் சில மாதங்களில் செலுத்தி முடிக்கப்பட்டது. ஏனெனில் இதனை 2013 ஆம் ஆண்டிலேயே செலுத்தி முடிப்பது கடினமாதலால் உரிய கொடுப்பனவு 2014 ஆம் ஆண்டில் செலுத்தப்படுமென உறுதியளிக்கின்றேன்.

(c) இறுதி கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட இணைப்புக்களில் குறிப்பிடப்பட்டவாறு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான செலவு ரூபா. 10,735,000 சரியானதாகும்.

(d) அனர்த்த முகாமைத்துவ நிலையத்திடமிருந்து கிடைக்கவேண்டிய ரூபா. 6.8 மில்லியன் 2012இன் இறுதிக்கணக்குகளில் நடைபெறும் வேலையாக காட்டப்பட்டது. எனினும் பொதுத் திறைசேரியினால் இதற்குரிய பணம் வழங்கப்படாமையால் இந்த தொகை நிறுவன திரண்ட நிதியத்திலிருந்து பதிவழிக்கப்பட்டது. நடைபெறும் வேலை ரூபா. 7,024,787 மற்றும் மேற்கூறிய ரூபா.6.8 மில் தொகைகளுக்கிடையிலான வித்தியாசமான ரூபா. 224,787 இல் ரூபா. 9,130.26 ஆனது P. L. விமல விக்ரமசிறி (பற்றுச்சீட்டு இல. 8251) இடமிருந்து கிடைக்கப்பெற்றது. மிகுதியானவை கீழ்வருமாறு கடன்பட்டோராக பதியப்பட்டது.

| | |
|---|---|
| 6529 - அக்கரைப்பத்தன தோட்டம் | 6,530.16 |
| 6601 - P.G.H.ஜயவிக்ரம | 5,828.57 |
| 6875 - R.N.K.வேரகொட | 5,371.43 |
| 7722 - J.J.J.பிரேமரத்ன | 12,228.71 |
| 7774 - C.A.C.மரிக்கார் | 6,168,00 |
| 8730 - உம ஓயா பல்நோக்கு அபிவிருத்தி | 7,547.68 |
| 8713 - லொவே லம்ஸ்டொடா நீர் மின்னுற்பத்தி லிமிட்டட் | 44,925.44 |
| 8913 - அனர்த்த முகாமைத்துவ நிலையம் | 127,000.00 |
| | 215,656.99 |

(e) முக்கியத்துவத்தை அடிப்படையாக கொண்டு சுயமாக இயங்கும் மழைமானிகள் ரூபா. 18,708,860 பெறுமதியான UNDP மானியத்தை கொண்டு கொள்வனவு செய்யப்பட்டது. மேலும் மழைமானிகள் ரூபா. 145,000 பெறுமதியில் நிறுவன நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டது. நிறுவன நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மழைமானிகளுக்கான பெறுமானத்தேய்வான ரூபா. 29,000 தவறாக UNDP. மானியத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட மழைமானிகளின் பெறுமானத்தேய்வுன் கீழ் காட்டப்பட்டுள்ளது. 2014 கணக்குகளின் போது இதனை திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(f) நடைமுறையிலுள்ள கொள்கை தீர்மானங்கள் மற்றும் நடைமுறைகள் காரணமாக மண்சரிவு இடர் மதிப்பீட்டு அறிக்கைகளை வழங்கும்போது

கொடுப்பனவுகள் கிடைக்குமுன் வழங்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பான கட்டணங்கள் அவை கிடைக்கும்வரை கணக்குகளில் காட்டப்படுவதில்லை. 2014 முதல் அவற்றை அறிக்கை வழங்கும்போதே வருமானமாக காட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

2.2.2 வருமதி கணக்கு

(a) 5-17 ஆண்டுகள் வரையிலான கடன்பட்டோர் ரூபா. 4,602,121 இல் ரூபா. 444, 022.94 தனியார்துறையினருக்கானது. இதில் ரூபா. 2,495.00 மீளப்பெறப்பட்டது. உள்ளக முகாமைத்துவ குழுவின் ஆலோசனைப்படி இதில் ரூபா. 441,521.94 பதிவழிக்கப்பட்டது. இதனை பதிவழித்த பின்னரான மீதியான ரூபா. 4, 602,121 பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகையாகும். எதிர்வரும் டிசம்பரில் இந்த தொகையை பதிவழிக்க உள்ளக முகாமைத்துவ குழுவின் அனுமதி கோரப்படும்.

(b) பொதுத்திறைசேரியிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா. 10,500,000 கிடைக்காததால் 2014 ஆம் ஆண்டில் இதனை திரண்ட நிதியத்தினூடே பதிவழிக்க திறைசேரியின் அனுமதி கோரப்படும்.

2.2.3 கணக்காய்விற்கு ஆதாரங்களை சமர்ப்பிக்காமை

மண்சரிவு தணிப்பு செயற்த்திட்டங்கள், மற்றும் ஏனைய செயற்த்திட்டங்கள் நிறுவனத்தின் ஆறு பிரிவுகளாலும் மேற்கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு நிறுவனத்திலும் பொறியியலாளர்கள் உள்ளடங்கலான விஞ்ஞானிகள் பணியாற்றுகின்றனர். இந்த பொறியியலாளர்கள் மற்றும் விஞ்ஞானிகள் சான்றுப்படுத்தும் அறிக்கைகளை குறித்த பிரிவிற்கான தொழில்நுட்ப பணிப்பாளர் அங்கீகரிப்பார். அதனடிப்படையில் குறித்த அறிக்கைகள் நிதிப்பிரிவிற்கு அனுப்பப்பட்டு அனைத்து பற்றுச்சீட்டுக்களும் கணக்காய்விற்காக அனுப்பப்படும்.

2.3 விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணக்கப்பாடின்மை

(a) பிரிவு 9.4 ஸ்தாபன கோவை

2012 இல் ஒரு அலுவலகர் ஜப்பான் நாட்டிற்கு மகாநாடு ஒன்றில் பங்குபற்ற ரூபா. 5,173.25 குளிர்கால ஆடை கொடுப்பனவாக வழங்கப்பட்டது. மேலும் அதே அலுவலகர் 2013 இல் நோர்வே நாட்டிற்கு பயிற்சிக்காக செல்லும்போதும் ரூபா. 15,176.25 குளிர்கால ஆடை கொடுப்பனவாக வழங்கப்பட்டது. ஸ்தாபன கோவை பிரிவு 9.4 இன் பிரகாரம் ஒரு அலுவலர்க்கு ஐந்து வருடங்களில் ஒருமுறை மாத்திரமே குளிர்கால ஆடை கொடுப்பனவு வழங்கமுடியும். எனவே ரூபா. 15,176.25 இனை குறித்த அலுவலகரிடமிருந்து மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(b) <u>நிதி சார்ந்த ஒழுங்குவிதிகள்</u>

(i) <u>FR 371 (2)</u>

முற்பணங்களை கணக்கு தீர்ப்பதில் உள்ள காலதாமதங்கள் குறித்து விசாரணைகள் இடம்பெற்றன. இந்த காலதாமதங்களுக்கான பிரதான காரணமாக முற்பணங்களை பெற்ற அலுவலர்கள் பலர் பின்தங்கிய பகுதிகளில் பணிபுரிவதாலும் ஒரு பதில் அலுவலகர் அவரது பணியை ஆற்றும் சந்தர்ப்பத்திலேயே அவரால் வந்து கணக்குகளை தீர்க்கமுடிகிறது. மேலும் குறித்த செயற்த்திட்டங்கள் சேவையுறும் நிறுவனங்களால் வழங்கப்பட்ட உரிய திகதிகளில் முடிக்கவேண்டி உள்ளதாலும் அலுவலகர்கள் அடிக்கடி கொழும்புக்கு வந்து போவது கடினமாக உள்ளமையும் இந்த நிலைக்கு காரணமாகும். சில நேரங்களில் இந்த அலுவலகர்கள் ஒரு செயற்த்திட்டத்தை நிறைவு செய்தவுடன் அண்மித்த பகுதியிலுள்ள இன்னொரு செயற்த்திட்ட நடவடிக்கைகளிலும் ஈடுபடவேண்டியுள்ளதால் இந்த தாமதங்கள் ஏற்படுகின்றன.

(ii) <u>FR 371 (5)</u>

தற்போது நிறுவனம் முற்பணங்களை கணக்கு தீர்ப்பதில் தொடர்பில் கடுமையாக செயற்படுவதுடன் இது தொடர்பில் சுற்று நிரூபங்களும் வழங்கப்பட்டுள்ளன.

(iii) <u>FR 757 (1) (a) & (b)</u>

FR 757 (1) (a) இன் படி 2014 முதல் வருட இறுதி இருப்பின் கணக்கெடுப்பை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் அதேவேளை அதன் முடிவில் களஞ்சிய காப்பாளரின் கையொப்பமும் பெறப்படும் என அறிவிக்கின்ற அதேவேளை களஞ்சிய காப்பாளரால் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் இருப்பு சரிபார்த்தலுக்கு சமர்ப்பிக்கப்படும்.

(iv) <u>FR 757 1647</u>

வாகனங்கள் தொடர்பான பரிசோதனைகள் FR 757 1647 இற்கமைய மேற்கொள்ளப்பட்டன. இந்த பரிசோதனைகள் வாகனங்களின் தனிப்பகுதிகளுக்கு மேற்கொள்ளப்படவில்லை. 2014 முதல் இப்பரிசோதனைகளை வாகனங்களின் ஒவ்வொரு பகுதிகளுக்கும் மேற்கொள்ள அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

(v) பொது நிர்வாக சுற்று நிரூபம் இல. 41/90 ஐப்பசி 10, 1990
ஒவ்வொரு ஆறு மாதத்திற்கும் ஒருமுறை வாகனங்களின் எரிபொருள் கொள்வனவை பரிசோதிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

3. நிதிப் பகுப்பாய்வு

3.1 நிதிப் பெறுபேறுகள்

2013 இன் செயற்பாட்டு செலவுகள் 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது அதிகமாகும். ஏனெனில் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் சுய வருமானத்தின் ஒருபகுதி பேராதெனிய மற்றும் பதியப்பளல்ல மண்சரிவு தணிப்பு நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய திறைசேரியின் பணத்திற்கு பதிலாக பயன்படுத்தப்பட்டது.

4. செயற்பாட்டுப் பகுப்பாய்வு

4.1 செயல்திறன்

(a) மண்சரிவு ஆபத்து வலய தேசப்படமாக்கல் செயற்த்திட்டம்
(i) ஆபத்து வலய தேசப்படமாக்கல் நடவடிக்கைகள் கீழ்வரும் படிமுறைகளில் மேற்கொள்ளப்பட்டன.
a. தேசப்படமாக்க வேண்டிய பகுதியின் தரைத்தோற்ற அமைப்புக்கள், நில அளவைத்திணைக்களத்தால் எடுக்கப்பட்ட ஆகாய புகைப்படங்கள், தேசப்படங்கள், பூகோளரீதியான தரவுகள் தொடர்பாக முதறக்கட்ட ஆய்வுகளை மேற்கொள்ளல்
b. தேசப்படமாக்க வேண்டிய பகுதிகளில் மேலதிக தகவல்களை பெற கள ஆய்வுகளை மேற்கொள்ளல்
c. பெற்ற தரவுகளை பூகோள தரவுத்தளத்தில் பதிவேற்றி பகுப்பாய்வு செய்தல்
d. பகுப்பாய்வு செய்த தரவுகளை கொண்டு தேசப்படங்களை தயாரித்தல்

மேற்கூறிய படிமுறைகளில் படிமுறை (b) கடினமானதும் அதிக முதலீடு மற்றும் காலம் அவசியமானதாகும். அத்துடன் அனேக தேசப்படமாக்கும் பகுதிகளும் நடந்து போவதற்கு கூட கடின பகுதிகளாக உள்ளன. எனவே வேலைகளை முடிக்கும்வரை குறித்த பகுதிகளில் தற்காலிகமாக தங்குவது அவசியமாகின்றது.

கணக்காய்வாளர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 2320 சதுர கி.மீ இற்கான 58 தேசப்படங்களுக்கான படிமுறை (b) இல் குறிப்பிடப்பட்ட கள ஆய்வுகள் 2013 இல் மேற்கொள்ளப்பட்டன.

மேலும் சில பகுதிகள் எதிர்பார்த்ததை விட கடினமான பகுதிகளாக காணப்பட்டமையால் திட்டமிட்டதைவிட செலவு அதிகமாகியது.

அத்துடன் தயாரிக்கப்பட்ட 58 தேசப்படங்களில் உள்ளடங்கியுள்ள 7 தேசப்படங்கள் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் திட்டமிடப்படவில்லை. பதுளை மாவட்டத்திற்கான அந்த 7 தேசப்படங்களும்
ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் காணி குடியேற்ற திணைக்களத்தின் வேண்டுகோளுக்கிணங்க அவர்களின் ஒரு ஆய்விற்காக இதற்குள் உள்வாங்கப்பட்டது. தேசப்படமாக்கலின் போது ஒதுக்கப்பட்ட நிதியில் 90% ஆனவை கள ஆய்வுகளுக்கும் ஏனைய 10% மீதி வேலைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றன. இதனடிப்படையில் 51 தேசப்படங்களை 2013 இன் பூரணமாக்கப்படவில்லை.

(ii) நிறுவனத்தின் இன்னொரு செயற்த்திட்டத்தின் கீழ் ஏற்பட்ட செலவு தேசப்பட தயாரிப்பிற்கான செலவின் கீழ் துணை ஒப்பந்தக்காரருக்கான கொடுப்பனவாக ரூபா. 1,881,731.05 2013 ஆம் ஆண்டிற்கான இறுதிக்கணக்குகளில் தவறாக காட்டப்பட்டுள்ளது. எனவே 2013 ஆம் ஆண்டிற்கான தேசப்பட தயாரிப்பிற்கான செலவு ரூபா. 20.1 மில்லியன் (அதாவது 21.99-1.88).

தேசப்படமாக்கலுக்காக திறைசேரியிடமிருந்து ரூபா.22.0 மில்லியன் கிடைக்கப்பெற்றது. இதில் ரூபா. 20.1 மில்லியன் செயற்த்திட்ட செலவுகளுக்காக பயன்படுத்தப்பட்ட அதேவேளை மீதியான ரூபா. 1.9 மில்லியன் மீதி தேசப்படங்களை அச்சிடப் பயன்படுத்தப்பட்டது. இந்த நிதி திரண்ட நிதியத்தில் பதிவழிக்கப்பட்டு 2014 இன் தேசப்பட நடவடிக்கைகளில் உள்ளடக்கப்படும்.

(b) <u>மண்சரிவு இடர் மதிப்பீட்டு அறிக்கைகளை வழங்கல்</u>

(i) மண்சரிவு அபாயப்பகுதிகளில் உள்ள அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு மண்சரிவின் ஆபத்துக்கள் தொடர்பாகவும் மண்சரிவு இடர் மதிப்பீட்டு அறிக்கை வழங்கும் முறையை ஒழுங்கமைப்பது தொடர்பாகவும் அறிவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ii) மண்சரிவு மதிப்பீட்டு அறிக்கைகளை வழங்கும் போது முன்னர் நிராகரிக்கப்பட்ட அறிக்கைகளுக்காக மீண்டும் புதிய மதிப்பீட்டறிக்கைகளை வழங்குவதை தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் நிராகரரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 1:50,000 தேசப்படத்தில் குறித்து காட்டவும் தனியான பதிவேடு ஒன்றை பராமரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேநேரத்தில் புதிதாக விண்ணப்பங்கள் கிடைக்கும்போது 1:50,000 தேசப்படத்தில் முன்னர் ஏதாயினும் அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளதா என ஆராயப்பட்ட பின்னரே உரிய ஆய்வுகள் ஆரம்பிக்கப்படும்.

மேலும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பில் கண்காணிக்க எவ்வித அதிகாரமும் இல்லை என இச்சந்தர்ப்பத்தில் தெரிவிக்கின்றோம்.

எமது நிறுவனத்திற்கு கிடைக்கும் விண்ணப்பங்களின் அடிப்படையில் நில உறுதி தொடர்பான ஆய்வுகள் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் அதிகாரங்களுக்குட்பட்டவாறு மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் வழங்கப்படுகிறது. மேலும் உரிய சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைவாகவே அறிக்கைகள் வழங்கப்படுகின்றன.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்ட சுற்றறிக்கையின் பிரிவு 4 இன் படி நிர்மாண நடவடிக்கைகள் NBRO இன் மும்மொழிவுகளுக்கு ஏற்ப இடம்பெற்றுள்ளனவா என கண்காணிக்கும் பொறுப்பு உரிய உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(iii) பிரதேச சபைகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க மண்சரிவு இடர் மதிப்பீட்டு அறிக்கைகள் வேலைகளின் முக்கியத்துவத்தை அறிந்து கொடுப்பனவு கிடைக்குமுன்னரே வழங்கப்பட்டன. இதுவரை குறித்த கொடுப்பனவுகள் கிடைக்கும்போதே வரவு வைக்கப்பட்டன. எனினும் 2014 முதல் இவற்றை வேறாக வருமதிகளாக காட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

(c) <u>கரந்தியெல மண்சரிவு தணிப்பு செயற்த்திட்டம்</u>

2012 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டுத்திட்டத்தின் படி திட்டமிடப்பட்ட செயற்பாடு ரூபா.27.56 மில்லியனில் பூர்த்தி செய்யப்பட்டது. இதற்காக திறைசேரியிடமிருந்து ரூபா. 14.72 மில் கிடைக்கப்பெற்றது. எனவே மீதியான ரூபா. 12.74 மில் 2013 ஆண்டின் மதிப்பீடுகளில் உள்ளடக்கப்பட்டது. அதனடிப்படையில் ரூபா. 30.15 மில் 2013 ஆம் ஆண்டில் மொத்தமாக மதிப்பிடப்பட்டது.

4.2 ஊழியர் முகாமைத்துவம்

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனமானது அதன் செலவுகளை அதன் வருமானத்தில் நிதியீட்டம் சுயமாக நிதியீட்டம் செய்யப்படும் நிறுவனமாகும்.எனவே ஊழியர்கள் அதன் நடவடிக்கைகளுக்கேற்பவும் நிறுவனத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர பணி நிலை பிரிவிற்கமைய எல்லா ஊழியர்களும் சேர்க்கப்படவில்லை.

ஏனைய நிறுவனங்களை போல எமது நிறுவனத்தில் நிலைபேறுள்ள செயற்பாட்டு மட்டத்தை பேணுவது கடினமாகும். ஏனெனில் எமது அனேக செயற்த்திட்டங்கள் போட்டித்தன்மையான

கேள்விப்பத்திரங்களுடாக பெறப்படுபவையாகும். சந்தை நிலைக்கேற்ப அதன் தன்மைகளும் மாறுபடுகின்ற அதேவேளை தேவையேற்படின் வேலைப்பழுக்களிற்கமைய ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். 2011 ஆம் ஆண்டில் 157 நிரந்தர ஊழியர்களும் 67 ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களும் நிறுவனத்தில் பணியாற்றினார்கள். நிறுவனத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட பணி நிலை ஊழியர்களின் எண்ணிக்கை 274 ஆகும்.

தற்போது நிறுவனத்தின் இலாப நிலை மேம்பட்டு வருகின்றது. அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பணி நிலைக்கேற்ப ஊழியர்களை சேர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட பணி நிலைக்கேற்ப 36 முகாமைத்துவ உதவியாளர்களுக்கான பதவிகள் உள்ளன. இவற்றில் 4 நிரந்தர நியமனங்கள் நிரப்பப்பட்டுள்ளன. பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டு பின்னர் நேர்முக தேர்வுகள் இடம்பெற்றன. எனினும் குறித்த பதவிக்கான தகமைகள் மற்றும் சம்பள மட்டம் என்பனவற்றால் இவற்றை நிரப்புவது கடினமாகவுள்ளது.

| விளம்பர திகதி | நேர்முக தேர்வு திகதி |
|---|---|
| 28.09.2012 | 16.11.2012 |
| 28.11.2012 | 24.12.2012 |

5. நிர்வாகமும் பொறுப்பு கூறும் தன்மையும்

5.1 நிறுவன உருவாக்கம்

நிறுவனத்தை பாராளுமன்ற சட்டத்தினூடாக உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

5.2 வருடாந்த செயற்பாட்டுத்திட்டம்

நிறுவனத்தின் வருடாந்த செயற்பாட்டுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை எட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் ஆபத்து வலய தேசப்படமாக்கல் மற்றும் மண்சரிவு தணிப்பு செயற்த்திட்டங்கள் தொடர்பான தெளிவாக்கம் விளக்கமாக 4.1(a) மற்றும் (b) இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

5.3 உள்ளக கணக்காய்வு

2013 இல் ஒரு உள்ளக கணக்காய்வளரும் அவரது உதவியாளரும் நிறுவன கணக்காய்வுகளை மேற்கொண்டனர்.

5.4 பாதீட்டு கட்டுப்பாடுகள்

மண்சரிவு தேசப்படமாக்கல், இடர் மதிப்பீட்டு அறிக்கை வழங்கல் மற்றும் கரந்தியெல மண்சரிவு தணிப்பு செயற்த்திட்டங்கள் தொடர்பான செலவு மதிப்பீடுகளை தயாரிக்கும் போது நேரடி செலவுகள் மற்றும் ஏனைய செலவுகள் மாத்திரமே கணக்கெடுக்கப்பட்டுள்ளன. மேந்தலை செலவுகள் கணக்கிடப்படவில்லை.

நிறுவனத்திற்கேற்பட்ட செலவுகளை மொத்தமாக கணக்கெடுத்த பின்னர் நிறுவன மேந்தலை செலவுகள் உள்வாங்கப்பட்டது. இதனை மேற்கொள்ளும் போது செலவு மதிப்பீட்டில் உள்ளடக்கப்படாத 34 விடயங்கள் உண்மை செலவுகளாக கணக்காய்வு அறிக்கையில் காட்டப்பட்டுள்ளன.

மேற்கூறிய விடயங்களை எதிர்காலத்தில் மதிப்பீடுகளில் உள்வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் அத்தகைய செலவுகள் அனைத்தும் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டிற்கு அமைவாக இல்லை என அறியத்தருகின்றோம்.

5.5 சூழல் மற்றும் சமூக பொறுப்புக்கள்

சூழல் மற்றும் சமூக பொறுப்புக்களின் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் எமது சம்மதத்தை தெரிவிக்கின்றோம்.

6. கட்டுப்பாடுகள் மற்றும் முறைமைகள்

வினைத்திறனான முகாமைத்துவத்தை மேம்படுத்த கட்டுப்பாடுகள் மற்றும் முறைமைகள் தொடர்பில் கீழ்வரும் அம்சங்களை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் கணக்காய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகளை மேம்படுத்துவது தொடர்பிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(a) கணக்கீடு
(b) கடன்பட்டோர் கட்டுப்பாடு
(c) ஊழியர் முகாமைத்துவம்
(d) செயற்த்திட்ட முகாமைத்துவம்
(e) பாதீட்டு கட்டுப்பாடு

பொறியியலாளர் (கலாநிதி) ஆசிறி கருணாவர்தன
பணிப்பாளர் நாயகம்
தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்

**தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்**
99/1, ஜாவத்தை வீதி, கொழும்பு 5.
தொலைபேசி: 011-2588946, தொலைநகல்: 011-2502611
மின்னஞ்சல்: nbro@sltnet.lk இணையம் : www.nbro.gov.lk